# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 5: இதழ் 4 மார்ச், 1953 விலை சதம்: 15

121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3045



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை வங்கி

உங்கள் முழுத் தேவைகளுக்கும் உதவும் ஒரு பூரண வங்கிச் சேவை முறையைக் கடைப்பிடிக்கிறது.

| | |
|---|---|
| தலைமைக் காரியாலயம் : | 41, பிரிஸ்டல் வீதி, கொழும்பு. |
| வெளிநாட்டு விவகாரப் பகுதி : | ஜீ. ஓ. எச், கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு |
| லண்டன் காரியாலயம்: | 468, லட்கேட் ஹில் லண்டன் ஈ. ஸீ. 4. |
| இலங்கைக் கிளைகள் : | கண்டி, காலி, யாழ்ப்பாணம், புறக்கோட்டை, (கொழும்பு) திரிகோணமலை, வதுளை, பாணந்துறை, களுத்துறை, மட்டக்களப்பு, குருநாகல், தலைமன்னார் பாலம் (பணம்கொடுக்கும்கந்தோர்.) |

**உங்களுக்கண்மையில் உங்களுக்குச் சேவை புரிய ஒரு காரியாலயமுண்டு.**

BANK OF CEYLON
COLOMBO


# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுதந்திர தினம் | 3 |
| 2. | குடியேற்றத் திட்டம் | 7 |
| 3. | மகா தேசாதிபதியின் ஊரதீவு விஜயம் | 9 |
| 4. | தோல் வாத்தியம் | 11 |
| 5. | திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்கள் | 14 |
| 6. | வழிவகை | 15 |
| 7. | கரும்புப் பயிர் | 16 |
| 8. | எங்கள் ஊர் | 20 |
| 9. | நவாலி வடக்கு சேவா சங்கம் | 21 |
| 10. | சிங்கள இலக்கிய சரித்திரம் | 22 |
| 11. | யாழ்ப்பாணப் பகுதிச் சனசமூக நிலைய சமாசம் | 23 |
| 12. | ஜனநாயகத்தின் மூலம் இலங்கையடைந்த முன்னேற்றம் | 25 |
| 13. | செக்கிரட்டேறியட் பௌத்த சங்க அங்கத்தவர்களின் திருகோணமலை விஜயம் | 27 |
| 14. | கோவில்வயல் த. க. பாடசாலை | 28 |
| 15. | திருநெல்வேலியில் ஓர் பெண்கள் கமத்தொழிற் பாடசாலை | 30 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1*—J. N. B 24697—4.506 (2/53)

## அட்டைப் படம்

அல்லிமலர் பூக்களுட் சிறந்த தாமரை வர்க்கத்தைச் சேர்ந்தது. இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் அல்லிக் குளங்கள் பரந்து கிடக்கின்றன. பௌத்தர்கள் புத்த வழிபாட்டிற்கு இத்தூய மலர்களைப் பக்தியுடன் எடுத்துச் செல்வதைச் சர்வ சாதாரணமாகக் காணலாம். மலர்களைத் தமிழர் பலவாறு பயன்படுத்தி யின்புற்றனர். மலர்கள் எவ்வாறு பயன்பட்டன என்பதைக் கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.



" ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறி நிற்போம்
பூசனை செய்யும் அடியவரின்-உள்ளம்
பொங்குகளிப் பெலாம் காட்டி நிற்போம் "

அல்லி மலர்களை அடியார் அன்புடன் பறித்துச் சென்று அர்ச்சித்து வழிபடுவது வழக்கம்.

ஆனால் மலர் பறிக்கச் சென்ற தாயுமான சுவாமிகள் அம்மலரிலும் இறைவன் வியாபகமாயிருத்தலைக் கண்டு அதனைப் பறிக்க மனம் கொள்ளவில்லை.

" பண்ணே னுனக்கான பூசையொரு-வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தி அப்
பனி மலரெடுக்க மனமும் நண்ணேன் "

என்று பாடி யுருகா நின்றார்.

Appropriate Technology Service
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3045

# சுதந்திர தினம்

இலங்கை தனது சுதந்திர தினத்தை பெப்ரவரி மாதம் 4 ந் தேதி அதி விமரிசையாகக் கொண்டாடிற்று. சூரியோதயத்தோடு ஸ்ரீ லங்கா முழுவதும் கொண்டாட்டங்கள் ஆரம்பமாயின. கோயில் மணிகளும் 21 மரியாதைக் குண்டுகளும் இலங்கை சுதந்திரமடைந்து ஐந்தாண்டுகள் பூர்த்தியாகிவிட்டதைப் பிரகடனப்படுத்தின.

இச்சுபதினத்தில் விசேஷ பிரார்த்தனைகளும் பூசைகளும் நடாத்தப்பட்டன. பிரதம மந்திரி கௌரவ திரு. டட்லி சேனநாயகா அவர்கள் பொல்வத்தை பௌத்த ஆலயத்திற்குச் சென்று புத்த பெருமானின் திருப்பாதங்களில் மலர்களைத் தூவி வழிபட்டார்.

துறைமுகத்திலிருந்த கப்பல்களும் அரசாங்கக் கட்டிடங்களும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேலும் இத்தினம் அரசாங்க விடுமுறை நாளாகவும் வங்கி விடுமுறை நாளாகவும் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்று காலை காலிபேஸ் திடலில் ஆயுதந் தாங்கிய படைகளின் அணிவகுப்பொன்று நடைபெற்றது. மேன்மைதங்கிய கவர்னர்-ஜெனரல் சோல்பரிப் பிரபு மேடைமீதிருந்து அணிவகுத்துச்சென்ற படைகளின் மரியாதையை ஏற்றார். ஓர் சுதந்திர நாட்டின் மனித பலத்தைக் கண்டு களிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திடலில் கூடியிருந்தனர். அமைச்சர்களும், பலநாடுகளையும் சேர்ந்த ஸ்தானிகர்களும், உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் இதர பிரமுகர்களும் விசேஷமாக ஒதுக்கப்பட்ட ஓரிடத்திலிருந்து அணிவகுப்பைக் கண்டுகளித்தனர்.

கொழும்பில் நடைபெற்ற முக்கிய வைபவங்களோடு நாட்டின் இதர பாகங்களிலும் இத்தினம் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. குக்கிராமங்கள் முதல் மாகாணத் தலைநகரங்கள் வரை இத்தினத்தைக் குறிப்பதற்கான விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலங்கையின் சுதந்திரச் சின்னமான சிம்மக் கொடி எங்கும் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கிற்று. " நமோ நமோ மாதா " என்ற நாட்டின் தேசியகீதம் எங்கும் இன்னிசையைப் பரப்பிக்கொண்டிருந்தது.

### பிரதமர் நிகழ்த்திய பிரசங்கம்

**1953 பெப்ரவரி 4 ந் தேதி சுதந்திர தினம் அகில இலங்கையிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.**

**அத்தினத்தில் கௌரவ பிரதம மந்திரி அவர்கள் வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு :**

நாம் சுதந்திரம் பெற்று இன்றுடன் ஐந்தாண்டுகள் பூர்த்தியாகின்றன. நானூறு வருடங்களாக அன்னிய ஆதிக்கத்திலிருந்த எமது தேசம் ஐந்து வருடங்களுக்கு முன்னர் உலகின் சுதந்திர நாடுகளின் நடுவே தனக்குரிய இடத்தைப் பெற்றது. இந்த ஐந்து வருட காலத்துள்ளே எங்கள் தேசீய தலை விதியை நிர்ணயிக்கும் உரிமையும், சகல நாடுகளோடும் நல்லெண்ணத்தையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்தல், எமக்குள்ளே சுபீட்சம், ஸ்திரத்தன்மை என்பவற்றை நிலை நாட்டுதல் என்னும் இலட்சியங்களை அடைவதில் ஆர்வமும் உடைய சுதந்திர மக்களாக நாம் விளங்குகிறோம் என்ற எண்ணம் எமக்கு ஏற்பட ஆரம்பித்துள்ளது.

இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் கடந்த கால நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்தல் பொருத்த முடையதாகும். அவ்வாறு செய்தலால் எங்கள் வெற்றிகள் எங்களுக்கு ஊக்கத்தை அளிக்கவும், எங்கள் தோல்விகள் எங்கள் குறைகளைத் திருத்தவும் உதவும். இவற்றின்பலனாக எங்கள் நாட்டினதும் எங்கள் தேசமக்களினதும் அபிவிருத்திக்கு இன்னும் அதிக சேவையாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா தேசாதிபதி சோல்பரிப் பிரபு அவர்கள் சுதந்திரத்தினத்தன்று நடைபெற்ற இராணுவ அணி வகுப்பைப் பார்வையிடும் காட்சி. அவருக்குப் பின்னல் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நிற்கிறார்.

றும் திடசங்கல்பம் கொண்டு எதிர் காலத்தை நோக்க முடியும். ஆனல் அதற்கு முன்னர் இரு துர்ப்பாக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும். முதலாவது நிகழ்ச்சி ஆறும் ஜோர்ஜ் மன்னரின் மரணம். மாட்சிமை தங்கிய இம்மன்னர்பிரான் ஆட்சிக்காலத்தில்தான் நாம் நமது சுதந்திரத்தை அடைந்தோம். இன்னும் இலங்கை மக்கள், சுதந்திரமான நிலையில் தம் மன்னராகவும் சாம்ராஜ்யத் தலைவராகவும் ஏற்றுக்கொண்ட முதலாவது மன்னவரும் அன்னவரே யாவர்.

இரண்டாவதாக சென்ற வருடம் இதே தினத்தில் தேச மக்களுக்கு ஒலி பரப்பிய காலஞ்சென்ற பிரதம மந்திரி அவர்களையும் நான் குறிப்பிடாதிருக்க முடியாது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் 50 வருடகாலமாக, இன்னல்கள் இடையூறுகள் ஊடே எங்கள் விடுதலையைப் பெறுதற்காகப் போராடியவர்களின் பெயர்களையும் நாம் நன்றியறிதலுடன் நினைவு கூரவேண்டும். எமது அரசியல் முன்னேற்றத்துக்கு நாம் மிகவும் கடப்பாடுகொண்டு விளங்கும் சேர். பொன்னம்பலம் அருணுசலம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் சேர். ஜேம்ஸ் பீரிஸ், சேர். பாரன் ஜயதிலக, திரு. இ. ஜே. சமரவிக்கிரம, திரு. எப். ஆர். சேனநாயகா, திரு. ஜியோர்ஜ் இ. டி. சில்வா, திரு. ஜி. ஏ. வில்லே, சேர். பிரான்ஸிஸ் மொலமுரே, திரு. டி. ஆர். விஜயவர்த்தன, சேர். முகம்மது மாக்கான் மைக்கார், எங்கள் காலஞ் சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா. அவர்கள் இப்பொழுது நம்மிடையேயில்லை, எனினும் இப்பெரியார்களின் நாமங்கள் என்றென்றும் கௌரவிக்கப்பட்டுவரும்.

**சாதனைச் சுருக்கம்**

எங்கள் சாதனைகளைக் குறிப்பிடுமிடத்து முதலில் எமது பிரதான அபிவிருத்தித் திட்டங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். கல்லோயா நீர்த்தேக்கம் நாம் குறித்திருந்த தேதிக்கு முன்னரே பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. [illegible] முதல் கோஷ்டியினர் ஏற்கனவே அங்கு ஆர்வத்தோடு வேலை செய்ய ஆரம்பித்து விட்டனர்; இப்பொழுது அங்கே அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றது.

காடடர்ந்து பாழிலமாய் இருந்த கல்லோயாப் பள்ளத்தாக்கு புன்னகை பூக்கும் வயல்களாகவும், கிராமங்களாகவும் அதி துரிதமாக மாறி வருகின்றன. இவை நாளடைவில் இத் தேசத்தின் முன்னேற்றத்தையும் செழிப்பையும் வளர்ப்பதில் தமக்குரிய பங்கை வகிக்க ஆரம்பிக்கும். லக்ஸபான நீர்—மின்சாரத் திட்டம் செயலாற்ற ஆரம்பித்து விட்டது; அடுத்த படித்துறை வேலைகள் பூர்த்தியடைந்ததும் எதிர் கால அபிவிருத்திக்கு வேண்டிய பிரமாண்டமான சக்தியைத் தரவல்லதாக இது அமையும். முடிவாக, துறைமுக அபிவிருத்தித் திட்டம் தனது முடிவை நோக்கி மிக விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

**இருப்பினும் தென் கிழக்காசியாவிலுள்ள இதர நாடுகளைப் போல** இலங்கைக்கும் உணவுப் பிரச்சினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான பிரச்சினையாக உள்ளது. பயிர்ச் செய்கையைத் தீவிரப்படுத்திப் புதிய பிரதேசங்களில் பரப்புதலில் முன்னேற்றம் எய்தப்பட்டிருப்பதோடு, விரைந்து அதிகரித்து வரும் ஜனத்தொகை வேகத்திலும் பார்க்க உற்பத்தி வேகம் அதிகரித்திருக்கும் போதிலும், சர்வ தேச விலைவாசிகள் அதிகரித்து வருவதாகத் தோன்றும் இக்காலத்தில் நமது உணவின் பெரும் பகுதிக்கு இதர நாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிர்பந்தமான நிலையிலேயே நாம் இருக்கிறோம். எனவே இத்துறையில் அதிகரித்த உற்பத்தியைப் பெற முன்னிலும் அதிக தீவிரமாக முயலுதலின் அத்தியாவசியத்தை இலங்கை மக்களுக்கு உணர்த்த இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

இத்துறையில் மலிவான உணவு, அதிக உற்பத்தி என்ற மாறுபட்ட இலட்சியங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் உணவுக்கு அதிக உதவி மான்யமளித்துக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்யும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டதால் விவசாயிக்கு லாபகரமான உற்பத்திக்கு போதிய ஊக்கம் அளிக்க முடியாது போயிற்று. இன்றிலும் பார்க்க உணவு அரிதாயிருந்த, கஷ்டம் நிறைந்த யுத்த காலத்தில் நாட்டுப்புறங்களெல்லாம் உப உணவுகளான மரவள்ளியாலும் இதர பயிர்களாலும் நிறைந்திருந்தமையை நாம் எல்லோரும் இன்றும் நினைவு கூர முடியும் என நம்புகிறேன். மேலும் அக்காலத்தில் அரிதாய்க் கிடைத்த அரிசிக்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்டவையும், உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையுமான உப உணவுகளை உண்ணும் பழக்கமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதர நாடுகளில் உள்ள மக்கள் இந் நடவடிக்கையின் அவசியத்தை உணர்ந்திருப்பதும், தென் கிழக்காசியாப் பிரதேசத்தில் உப உணவுப் பொருட்களை உபயோகித்தல் பத்து மடங்கு அதிகரித்திருப்பதும் கவனிக்கத் தக்கன. ஆகவே இப்பிரச்சினையை உண்மை நிலைகளுக்கேற்ற ஓர் நீண்ட காலப் பார்வையோடு நோக்கி அதனைப் பொருத்தமான முறையில் தீர்க்க முயலுவோமாக.

சுகாதார சேவையில் நாம் அடைந்த முன்னேற்றத்திற்கு மலேரியா ஒழிப்பு இயக்கத்தில் நாம் அடைந்த அநுகூலம் போன்ற பிரதான சாதனைகளைக் குறிப்பிடலாம். இப்பொழுது எங்கள் குடிசனப் பெருக்க வீதம் உலகின்கண் காணப்படும் கூடிய வீதங்களுள் ஒன்றாக இருக்கின்றது. இது பிறப்பு வீதம் கூடியதால் அதிகரித்தது என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் கடந்த ஐம்பது வருடங்களாக பிறப்பு வீதம் அதிகரிக்கவில்லை. ஆனால் இறப்பு வீதம் மிகமிகக் குறைந்து விட்டதின் பயனாகவே குடிசனப் பெருக்க வீதம் அதிகரித்தது. சுகாதார சேவைகள் ஆற்றிய அருந் தொண்டிற்கு இது போதிய சான்று பகரும். பெருங்கேடு விளைத்து வரும் க்ஷயரோகத்தை நம் நாட்டினின்றும் அகற்றுவதற்காகத் தீவிரமான போராட்டத்தில் அரசாங்கம் தற்பொழுது இறங்கியுள்ளது.

கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் கிராமப் பகுதிகளில் அநேக பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளமையாம். இலங்கையின் எழிற் புதல்வர்... முறுவல் பூத்த முகத்துடன் இப் பாடசாலைகளுக்குப் பெருந்தொகையாகச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

கல்வி இனிமேல் சிலாக்கியம் பெற்ற ஒரு சிலருடைய ஏகபோக உரிமைப் பொருளாக இருக்க மாட்டாது. மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரினதும் உரிமையாகக் கல்வி இப்பொழுது விளங்கி வருகின்றது. இவ்வித மாற்றத்தினால் நம் நாட்டின் எதிர்கால முன்னேற்றம் எவ்வளவு அபார சக்திவாய்ந்ததாகவிருக்கும் என்பதை நாங்கள் நன்கு ஊகித்துக்கொள்ள முடியும். ஆனால் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதையே ஒரு தொழிலாகக் கருதும் நோக்கம் துரதிர்ஷ்டவசமாக இன்னும் காணப்படுகிறது. சகல துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதே இலங்கையின் தற்போதைய தேவையாக இருக்கிறது என்பதை இக்காலச் சிறுவர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். அரசாங்க சேவையில் மோகங்கொள்வதால் எங்கள் தேவைக்கான யாவற்றையும் பூர்த்தி செய்து விடமுடியாது.

அரசாங்கத்தின் சில மிகவும் முக்கிய நடவடிக்கைகளைப்பற்றிக் கூறும் பொழுது, இவைகளைத் தொடர்ந்து நடத்துவதில் ஏற்பட்ட பிசகுகளையும் குறைவுகளையும், நான் மறந்துவிடவில்லை என்பதை உறுதியிட்டுக் கூறுகின்றேன். இக்குறைவுகளை உணர்ந்ததனாலேயே இவைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக உங்களெல்லோருடைய உதவியையும் நாடுகின்றேன்.

Appropriate Technology Services
121, POINT ROAD
NALLUR,
No. ----



மந்திரி சபையினரும், அவர்களது மனைவிமாரும், செனேட் சபை அங்கத்தினரும் இராணுவ அணிவகுப்பைப் பார்த்து மகிழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாரிய பொருளாதார, சமுதாய அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையிலிருந்த பொழுதே ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கச் செலவு 1947-48ல் 50 கோடி ரூபாவாகவிருந்தது. இவ்வருடத்தில் கிட்டத்தட்ட 130 கோடி ரூபாவாக உயர்ந்திருக்கின்றது. இக்காலவெல்லைக்குள், அதாவது நாம் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை 90 கோடி ரூபா கடன் நிதியிலிருந்து, இப்பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கெனச் செலவழித்திருப்போம். மேலும் அரசிறையிலிருந்து தொகையான பணம் அபிவிருத்தித்திட்டங்களுக்கென செலவழிக்கப்படுகின்றது. உணவுக்கு உபமான்யமாக மாத்திரம், நாம் 70 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகையைச் செலவழித்திருக்கின்றோம்.

**கஷ்டமான நிலை.**

கொரியா யுத்தகால வியாபாரப்பெருக்கத்தின்போது நாம் கடுமையான பொருளாதாரக் கஷ்டங்களையனுபவிக்கவில்லை. உண்மையில், ஒரு வருடத்திற்கு மேற்பட்டகாலம் அரசிறையைக் கொண்டே எமது அபிவிருத்திக்கான செலவுகள்உட்பட எல்லாச் செலவுகளையும் சமாளிக்க முடிந்தது. ஏற்றுமதிப் பொருட்களின் விலை மிகவும் குறைந்ததால், இது அரசிறையைப் பெரிதும் பாதித்தது. அதன் காரணமாக கடந்த 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குள் 30 கோடி ரூபாவிற்கு துண்டு விழுந்திருக்கின்றது. எதிர்பாராத ஒரு சம்பவத்தினால் மேலும் மோசமான நிலையையடைந்தோம். ஏற்றுமதிப் பொருட்களின் விலை குறையும் பொழுது, இறக்குமதிப்பொருட்களின் விலையும் பொதுவாகக் குறைவது வழக்கமாகும். எனினும் கடந்த வருடம் ஏற்றுமதி விலை குறைந்த நேரத்திலேயே இறக்குமதிப் பொருட்களின் விலை சடுதியாக உயர்ந்தது. இதனால் வெளி நாடுகளிலிருந்த நமது மூலதனத்தில் குறைவு ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலை நாம் தற்பொழுது பொருளாதாரத் துறையில் வகிக்கும் உண்மை நிலையை அறியத் தூண்டுகின்றது.

குறைந்த நிதிவளமுள்ள காலத்தில் முதலில் அவசியமான விஷயங்களை வரிசைக் கிரமப்படுத்தி அதன்படி அந்நிதிவளத்தை உபயோகித்தல் நமது விசேஷ கடப்பாடாகும்.

நாம் நீண்டகாலப் போக்கில் விஷயங்களைக் கவனித்தால், எதிர்காலத்தில் கூடிய உற்பத்திப் பொருட்களைப் பெறுவதற்காக தற்போதைய பொருள் நுகர்வைக் குறைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவழிக்க வேண்டுமென்பதை உணர்வது அவசியமாகின்றது. இத்துறையில் நோக்கும் பொழுது எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவியளிக்க ஒரு ஸ்தாபனம் நிறுவப்படவேண்டுமென்பதை நீங்கள் வரவேற்பீர்களென நினைக்கிறேன். உலக வங்கித் தூதுகோஷ்டியும் தனது அறிக்கையில் இதையே சிபார்சு செய்திருக்கின்றது.

நாம் அரசியற்சுதந்திரத்தைப்பெற்றுவிட்டபோதிலும், சுதந்திரம் என்பது நமது உரிமைகளுக்கு உறுதியளிப்பது மட்டுமே என எண்ணுகிறோம். ஆனால் நம் கடமைகளைச் செய்யவேண்டுமென்பதை நாம் இன்னும் உணரவில்லை. இச்சுதந்திரம் நம்நாட்டை நமது சொந்த முயற்சிகளால் விருத்தி செய்ய நமக்கு உரிமை அளிக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்வோமாக. "நமது சொந்த முயற்சி" எனக் கூறும்பொழுது அது அரசாங்கத்தை மாத்திரம் குறிப்பிடவில்லை.

நாம் சுதந்திரம் பெற்றதுமுதல் எங்கள் ஒவ்வொருவரதும் அதிக பிரயாசையின்றி தானாகவே இந்நாடு முன்னேற்றமடையுமென்ற உணர்ச்சி துரதிர்ஷ்டவசமாக அதிகரித்துள்ளது. ஒவ்வொரு தனிப்பட்ட நபரினதும் சுமுகவாழ்வுக்கு வேண்டிய யாவற்றையும் ஓர் காருண்யமான அரசாங்கம் செய்துதர வேண்டும் என எதிர்பார்ப்பதே அந்த உணர்ச்சியாகும். இந்த விதமான திரிபுணர்ச்சி ஏற்படுவதற்கு மற்றவர் எவரையும் விட அரசியல் வாதியே பொறுப்பாளியாயிருக்கக் கூடும். எனவே, நாம் இந்நாட்டின் எதிர்கால சேமத்தில் ஏதாவது நம்பிக்கை கொண்டிருப்போமானால், அந்த மனப்பான்மையை மாற்றவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

தனிப்பட்ட ஒருவரின் நலனை ஒரு பொது முயற்சியால் விருத்தியாக்குவதற்கு இங்கு அநேக ஸ்தாபனங்கள் இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்தத் தொடர்பில், இந்நாட்டின் கிராமாபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவியக்கங்களும் ஆற்றிய தீவிர முன்னேற்றங்களை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

ஒரு அரசாங்கம் தனது கடமைகளைச் சரியாகச் செய்து முடிப்பதற்கு ஒரு சிறந்த நிர்வாக முறையை அவசியம் வேண்டி நிற்கிறது. அரசாங்க சேவையின் சகல துறைகளிலும் மனநேர்மையுடன் கடமைபுரியும் அதிகாரிகளைக் கண்டு மகிழும் அனுபவம் எனக்கிருந்தது. ஆனால் எங்களில் எத்தனை பேர் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறோம் ? மொத்த வருவாயாகிய 90 கோடியே 40 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவில், இன்று 42 கோடியே 10 லட்சம் ரூபாவை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாகவும் உதவிப்பணமாகவும் வழங்குகின்றோம். இத்தொகையில், வேலை மதிப்பீடுகள், முற்பணக் கணக்குகள் என்பவற்றின்கீழ் உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்குச் செலவழிந்த பணம் சேரவில்லை. இவர்களுக்கு வழங்கப்படும் தொகைக்குப் பதிலாக நேர்மையும் உண்மையுமுள்ள கடமை மேற்கொள்ளப்பட வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த உண்மையை உணர்தல் எதிர் காலத்தில் ஊக்கத்தை அதிகரிக்குமென்பதை நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

கஷ்டமான சந்தர்ப்பங்கள் இவ்வருடத்தை இந்நாட்டுக்குக் கஷ்டமளிப்பதாக்குமென்பதில் சந்தேகமில்லை. இது இந்நாட்டுக்கு ஒரு சோதனைகாலமாகவும் கூடும். ஆனால் எங்கள் மக்களுடன் பிறந்த சகசமான உத்தமகுணம் இக்கஷ்டக் கடலைத் தாண்டி எம்மைக் கரையேற்றும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றத் திட்டம்

**1951 ம் ஆண்டில் குடியேற்றத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட அபிவிருத்தி காணிக் கொமிஷனரின் நிர்வாக அறிக்கையில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியை ஈண்டெடுத்துக் காட்டுகின்றும்.**

### அநுராதபுர டிஸ்திறிக்

**காகமை பழையது.**

1951 ம் ஆண்டு ஏப்பிரில் மாதத்தில் சிறுதானியம் சாகுபடி செய்யப்பட்டு குடியேற்ற வாசிகள் திருப்திகரமான விளைச்சலைப் பெற்றனர். நெற்பயிர் விளைவுக்குப் பதிலாக குரக்கனும் சோளமும் சாகுபடி செய்யப்பட்டன. கடந்த சில வருடங்களில் செப்ரெம்பர் மாதத்தில் இடைப்போக வேளாண்மையால் அதிக நெல்லு கிடைத்தது. பழைய குடியேற்ற இடத்தில் பிரசவ விடுதி நன்கு உபயோகிக்கப்படுகின்றது. மேலதிகமான கல்வி நிலையமும் திருப்திகரமான வேலை செய்துவருகின்றது. இக்குடியேற்ற இடத்தில் காணிகள் பெற்ற கரம்பவேவ கிராம வாசிகட்கு 33 வீடுகளும் மலசலகூடங்களும் கட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**காகமை புதியது.**

1951 ல் சிறுபோக வேளாண்மை நற்பயனளித்தது. பெரும் போகமும் மிகவும் திருப்தியான விளைச்சலைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு புதிய டிஸ்பென்ஸரி 10 ம் தொகுதியில் திறக்கப்பட்டுள்ளது. இரு கிராமாபிவிருத்திச் சபைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒரு பௌத்த கோயில் கட்டப்பெற்றுள்ளது. 5, 6, 7 ம் தொகுதிகளில் பாடசாலைப் பிள்ளைகளின் உபயோகத்துக்காக ஒரு தற்காலிகக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

**நுவரவெவ வலது கரைக் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம்.**

கடுமையான வரட்சியும் வேறு காரணங்களும் சேர்ந்து நெற்காணிகளில் பயிர்ச் செய்கைக்கு தண்ணீர் பாய்ச்சுவதைத் தடைப்படுத்தியதால், இக்குடியேற்றப் பகுதி துரதிர்ஷ்டவசமாகப் பாதிக்கப்பட்டது. 1951-52 கால போகத்தில் நுவரவெவ நீர் நிறைந்திருந்தபடியால், இக்காலத்தில் குடியேற்றவாசிகள் தமது முதலாவது நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.

குடியேற்றவாசிகளுக்கு நேர்ந்த கஷ்ட காலத்தைச் சமாளிக்க, இவர்களுக்கு மாதாந்த கைச்செலவு உதவிப் பணம் கூடுதலான காலத்துக்கு அளிக்கப்பட்டது.

மேட்டு நிலப்பங்கீட்டுக் காணிகளில் நடுவதற்கு மாக்கன்றுகள்கொடுக்கப்பட்டன. குடியேற்றவாசிகள் அவற்றை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

**தேவஹூவ**

1950-51 ல் பெரும்போக கால மழை பெய்யாமையால் குடியேற்றவாசிகள் பெரும்போகப் பயிர் செய்கைபண்ண முடியவில்லை. 1 ம், 2 ம் தொகுதிகளிலும் 3 ம் தொகுதியின் ஒரு பகுதியிலும் இடைப் போகப் பயிர் செய்கைபண்ணப்பட்டது. நல்ல விளைச்சல் வற்படாத காலத்தில் உதவியளிக்கும் பொருட்டு 5 ம், 7 ம் தொகுதிகளிலுள்ள சில பங்கீட்டுக்காணி பெற்றவர்களுக்கு வாழ்க்கைச் செலவு உதவிப் பணம் மேலதிகமாக ஐந்து மாதத்துக்கு அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் 8 ம் 9 ம் தொகுதிகளில் 133 குடியேற்றவாசிகள் 1951 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் குடியேறினர்.

கிராமாபிவிருத்திச் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

**மின்னேரியா**

1951 ம் ஆண்டில் மின்னேரியாவில் காணி பராதீனப்படுத்தப்படவில்லை. மின்னேரியா அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட இரு கூட்டுறவு விளைபொருள் உற்பத்திவிற்பனவுச் சங்கங்கள் நெல் வாங்கி விற்பதில் நல்ல வியாபாரம் நடத்தின. மின்னேரியா கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் இவ்வருட முடிவில் 50,000 ரூபா மேலதிக பணமாக வைத்திருந்தது. ஹத்முனை சங்கம் ஏற்படுத்திய கூட்டுறவு நாணய வசதிகளால் குடியேற்றவாசிகள் தங்கள் கடனைத் தீர்த்துக்கொள்ளக்கூடியதாகவிருந்தது.

குடியேற்ற வாசிகளின் சுகாதாரம் நல்ல நிலைமையில் இருக்கிறது. இவ்வருடத்தில் நான்கு புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பெற்றன.

1951 ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் ஆதரவில் மின்னேரியாவில் ஆதார கல்வி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. குடியேற்ற இடத்தில் வயது வந்தோர் கல்வி வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

நான்கு மகிலை சமித்தி சபைகள் தாபிக்கப்பெற்றன.

**பராக்கிரம சமுத்திரத்திட்டம்**

இத்தீவின் பல பாகங்களிலுமிருந்து 687 குடியேற்றவாசிகள் இத்திட்டத்தின் பிரகாரம் 1951 ம் ஆண்டுக் கடைசியில் குடியேறினார்கள். நில அபிவிருத்திப் பகுதி புதிதாக வகுத்த இடப்பரப்பில் இவர்கள் குடியேற்றப்பட்டார்கள். புதிதாகக் குடியேறியவர்களிடையே சீதபேதி நோய் பரவியது. தேவையான கஷ்டநிவாரணம் உடனே அளிக்கப்பெற்று அந்நோய் பரவாமல் தடுக்கப்பெற்றது.

கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் தொடர்ந்து நல்ல வேலை செய்துவருகின்றன. எல்லாமாக நான்கு கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களும் 21 கூட்டுறவு நாணயச் சங்கங்களும் 3 கூட்டுறவுப் பண்டகசாலைகளுமுண்டு. மூன்று புதிய பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பெற்றன.

**கிரித்தல திட்டம்**

இவ்விடத்திலுள்ள குடியேற்றவாசிகளின் தொகை 276. இக்குடியேற்ற இடம் நல்ல அபிவிருத்தி அடைந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டி டிஸ்திறிக்.

#### மினிப்பே குறியேற்றத்திட்டம்

மினிப்பே குடியேற்றத்திட்டத்தின் பிரகாரம் III ம் படிமுறை வேலை இவ்வருடத்தில் பூர்த்தியாகிவிட்டது. 1951 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இத்திட்டத்தின் பிரகாரம் 40 பேர் குடியேற்றப்பட்டனர். மேட்டுநிலக் காணிகளின் அபிவிருத்தி வேலைகளை குடியேறிய விவசாயிகள் இப்பொழுது சுறுசுறுப்பாகச் செய்துவருகின்றனர். இவ்வருடத்தில் முழுத் திட்டத்தின் பிரகாரம் குடியேறிய மக்களின் சுகாதாரம் நல்ல நிலைமையில் இருந்தது. மினிப்பே கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கம் இவ்வருடத்தில் 46,000 புசல் நெல்லு வாங்கியது. குடியேற்ற வாசிகளுக்கு 50,000 ரூபா வரை கடன் கொடுத்துதவியது. குடியேற்ற வாசிகளின் பிள்ளைகளுக்கு மினிப்பே, மொரயாய், பல்லவத்தை என்னுமிடங்களிலுள்ள மூன்று பாடசாலைகள் கல்விபோதிக்க உதவுகின்றன.

### வதுளை டிஸ்திறிக்.

#### வத்மெடில்ல

இத்திட்டத்தின் பிரகாரம் சகல நிலமும் 1950 ம் ஆண்டில் பராதீனப் படுத்தப்பட்டது. ஏறக்குறைய 1,000 ஏக்கர் நிலத்தில் 1951–52 ல் பெரும் போகப் பயிர்ச் செய்கை பண்ணப்பட்டது. நெற்காணிகளில் மரம்வெட்டி மட்டப்படுத்துவதற்கும் மேட்டு நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கும் குடியேற்ற வாசிகளுக்கு இவ்வருடத்தில் பண உதவியளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கம் திருப்திகரமான வேலை செய்துவருகின்றது. உழுவதற்கு எருமைகள் வாங்க குடியேற்ற வாசிகளுக்கு பணம் கடனாகக் கொடுத்து உதவிசெய்தது.

#### ஒக்கம்பிட்டி.

இவ்வருட ஆரம்பத்தில் இத்திட்டத்தின் பிரகாரம் 28 குடியேற்றவாசிகள் மட்டுமே இருந்தனர். 1951 ம் ஆண்டில் 24 பேர் குடியேற்றப்பட்டனர்.

குடியேற்ற வாசிகளுக்கு வாழ்க்கைச் செலவு உதவிப் பணம் அளிக்கப்பட்டது. 1951–52 ல் பெரும் போகப் பயிர்ச் செய்கைக்காக விதை நெல் இலவசமாக அளிக்கப்பட்டது. 1951–52 ல் பெரும் போகத்தில் 159 ஏக்கர் நெற்காணி செய்கைபண்ணப்பட்டது. மேட்டு நிலத்தை அபிவிருத்தி செய்ய பண உதவி அளிக்கப்பட்டது. மரக்கன்றுகள் இலவசமாக அளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கம் உழுவதற்கு எருமைகள் வாங்க குடியேற்றவாசிகளுக்குப் பணம் கடனாக கொடுத்துதவிவருகின்றது.

### குருநாகல் டிஸ்திறிக்

#### ரிதிபெந்திஎல திட்டம்

பங்கிட்டுக் காணிகளில் இருந்த சகல தற்காலிக வீடுகளுக்கும் மலசலகூடங்களுக்கும் பதிலாக நிரந்தரமான கட்டடங்கள் கட்டப்பெற்றுள்ளன. பராதீனப்படுத்தப்பட்ட நெற்காணி முழுவதும் இப்பொழுது மரம் வெட்டித் துப்புரவாக்கப்பட்டுள்ளது.

1950–51 ல் பெரும் போக நெற்பயிர்ச் செய்கையால் நல்ல விளைவு ஏற்பட்டது. திருக்ரர்மூலம் உழுவதால் குறைவான அளவு நீர் உபயோகிக்சப்படும் என்பது புலனாயிற்று. நீர்ப்பாய்ச்ச முடியாத நெற்காணிகளும் இடைக்கிடை பெய்த மழையின் உதவியால் உழுது பயிரிடப்பட்டன. 1950–51 ல் பெரும் போகத்தில் மேட்டு நிலத்தில் இறுங்கு விளைவிக்கும் இயக்கம் பிரதானமாக விவசாய உத்தியோகத்தரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இறுங்கு விளைவு செய்தால் பணம் சம்பாதிக்கலாம் என்பது நன்கு புலனாயிற்று. குறிக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் இடைப்போக விளைவும் நற்பயனளித்தது. தண்ணீர் பாய்ச்ச முடியாத பங்கிட்டுக்காணிகளில் வேறு தானியவகைகளைப் பயிரிடுமாறு குடியேற்றவாசிகள் தூண்டப்பட்டனர் எனினும் அதிக அபிவிருத்தி ஏற்படவில்லை.

16,000 தென்னம்பிள்ளைகளும் பழந்தரு மரக்கன்றுகளும் குடியேற்ற வாசிகளுக்கு அளிக்கப்பட்டன. இவை உத்தியோகத்தர் மேற்பார்வையின் கீழ் முறையாக நடப்பட்டன.

### மாத்தளை டிஸ்திறிக்

#### எலாஹெர திட்டம்

இத்திட்டத்திலுள்ள நீர்ப்பாய்ச்சல் கஷ்டங்களை நீக்க நீர்ப்பாய்ச்சல் பகுதி ஆவன செய்துவருகின்றது. எலாஹெர திட்டத்தின் கீழ் நிறுவப்பெற்ற கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கம் மாத்தளை டிஸ்திறிக்கிலுள்ள ஏனைய கூட்டுறவுச் சங்கங்களிலும் மிகவும் சிறந்ததொன்றாகும். மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் திருப்திகரமாக வேலைசெய்கின்றன.

### யாழ்ப்பாணம்.

#### இரணைமடு கிளிநொச்சி–பழைய குடியேற்ற இடம்

குடியேற்ற வாசிகள் பெரும் போகத்திலும் சிறு போகத்திலும் ஒழுங்காகத் தங்கள் காணிகளில் வேளாண்மை செய்து வருகின்றனர். மேட்டு நிலப் பங்கீட்டுக் காணிகளில் தென்னை, பலா, மா, எலுமிச்சை, தோடை, கமுகு, ஈரப் பலா முதலிய நிரந்தரப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. அவை குடியேற்ற வாசிகளுக்கு நல்ல வருவாய் தரும் பயிர்களாக இருக்கின்றன. குடியேற்ற வாசிகளின் ஆடு மாடுகள் மேய்வதற்காக 280 ஏக்கர் மேய்ச்சல் நிலம் ஒதுக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனைச் சங்கத்திடம் இருந்து பெற்ற கடன் பணத்தைக் கொண்டு குடியேற்ற வாசிகள் கிணறுகள் கிண்டத் தொடங்கி விட்டனர்.

டி. டி. ரி. மருந்து வைத்திய பகுதியால் ஒழுங்காகத் தெளிக்கப்பட்டு வருகின்றது.

#### இரணைமடு பரந்தன்–புதிய குடியேற்ற இடம்

நெற் காணி முழுவதிலும் மரம் வெட்டப் பட்டுள்ளது. 1950–51 ல் குடியேற்ற வாசிகள் 668 ஏக்கர்காணியில் வேளாண்மை செய்து 6680 புசல் நெல்லு விளைவு செய்தனர். அதாவது சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 10 புசல் வீதம் பெற்றனர். குறைச்சலான விளைவுக்குக் காரணம் அக்காலத்தில் ஏற்பட்ட வரட்சியேயாகும். 1951 ல் சிறு போகத்தில் 330 ஏக்கர் காணி செய்கை பண்ணப் பட்டது. 7718 புசல் நெல் விளைந்தது, அதாவது ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 23 புசல் நெல் விளைந்தது. கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் மூலம் வாடகைக்குப் பெற்ற திருக்ரரைக் கொண்டு உழுதது ஒரு நவீன அம்சமாகும்.

[ 10 ம் பக்கம் பாக்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்னர் வந்த கதை.

# மகா தேசாதிபதியின் ஊரதீவு விஜயம்

“மற்றைய கிராம மக்களும் இக்கிராமத்தைப் பின்பற்றி நடக்கவேண்டும். உங்கள் கிராம முன்னேற்றச் சங்கம் உங்களுக்குச் செய்துள்ள சேவைகளை நான் பாராட்டுகின்றேன். மற்றைய கிராமங்களுக்கு நான் விஜயம் செய்கின்றபோது உங்கள் கிராம முன்மாதிரியைக் கூறுவேன். உங்கள் கிராமம் சுயதேவையைப் பூர்த்தி செய்வதில் இலங்கைத் தீவிற்கே முன்மாதிரியாய்த் திகழ்கின்றது.”

இவை ஊரதீவுக் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தைத் திறந்து வைத்தபோது மகாதேசாதிபதி அவர்கள் கூறிய வாசகங்கள்.

கடந்த 27-1-53 செவ்வாய்க்கிழமை, தீவுப் பகுதிச் சரித்திரத்திலே பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள். அன்று அரசியல் ஞானமும் உலகியலறிவும் மிக்க மகா தேசாதிபதி சோல்பரிப்பிரபு அவர்கள் புங்குடுதீவுக்கு விஜயம் செய்தார்கள். தேசாதிபதி ஒருவரை முதன் முதல் வரவேற்க மக்கள் தயாரானார்கள்; 15 பாடசாலைகளும் விடுதலை விட்டன. நாற்றிசை மக்களும் நாட்டுத் தலைவருக்கு நல்வரவு கூற—அவர் நல்லுரை கேட்க—ஊரதீவை அடைந்தனர்.

நட்சத்திரங்கள் புடைசூழ சந்திரன் வருவது போன்று, பிரதானிகள் புடைசூழத் தேசாதிபதி அவர்கள் வந்தார்கள். தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. அ. லெ. தம்பிஐயா, வடமாகாண அதிபர் திரு. பி. ஜெ. ஹட்சன் முதலிய பிரமுகர்களும் கூட வந்தார்கள். தேசாதிபதி அவர்களைக் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சி. நா. பாலசிங்கம், சனசமூக நிலையக் காரியதரிசி திரு. இ. க. கணபதிப்பிள்ளை ஆகியோர் மலர் மாலை சூட்டி வரவேற்றனர். அத்தருணம் அழகிய பந்தலில் வீற்றிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் எழுந்து அஞ்சலி செய்தனர். பதிலுக்குத் தேசாதிபதியவர்களும் புன்னகை தவழத் தமிழ் முறையில் வணங்கினார்கள்.

கட்டிடத்தைத் திறந்து வைக்கும் வண்ணம் தீவுப் பகுதிக்காரியாதிகாரி (D. R. O.) திரு. செ. சிவஞானம் கேட்டுக் கொள்ள, பிள்ளையார் படத்தின் முன்பு குத்து விளக்குத் தீபம் ஏற்றிச் சைவத் தமிழ் முறைப்படி திறப்பு விழாவை நடாத்தி வைத்தார் தேசாதிபதி. இதைக் கண்ணுற்ற மக்கள் கண்பெற்றதன் பயனை அன்று அடைந்தனர்!

சன சமூக நிலைய வாசிகசாலையைப் பார்வையிட்ட பின், பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், சங்கம் செய்த புரட்சிகரமான பணிகளை விபரித்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிக்கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. யாவற்றையும் பார்வையிட்ட பின் மகாதேசாதிபதி அவர்கள் மொழிந்த—போற்றிப் புகழ்ந்த—மொழிகளே கட்டுரை முகப்பில் மிளிர்வன.

இலங்கைத் தீவின் வடபால் அமைந்த சப்த தீவுகளில் ஒன்று புங்குடுதீவு. இப் பொன்கொடுதீவின் வடபால் வளங்குறைந்த பகுதியாய் அமைந்திருப்பது ஊரதீவு. இது மாரியில் மருத நிலமாயும் கோடையில் பாலைவனமாயும் காட்சி அளிக்கும் பான்மையது. இயற்கை அன்னையின் கடாட்சம் குறைந்தது. இவ்வூரிற் தான் முதன் முதலாகப்


Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

மகா தேசாதிபதி சோல்பரிப் பிரபு ஊரதீவு கி. மு. சங்கச் சபா மண்டபத்தைத் தீபமேற்றித் திறந்து வைக்கின்றார். பக்கத்தில் தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. அ. லெ. தம்பிஐயா, சங்கத்தலைவர் திரு. சி. நா. பாலசிங்கம் ஆகியவர்கள் நிற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவிற் குடியேறிய வேளாண் மக்கள் குடியேறினர் என்பர். உடையார் முதலிய தலைமைக்காரர் இங்கு வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல உள. அன்றி, அக்காலத்தில் ஆநிரைக்கூட்டமும் அளவில்லாதிருந்ததால் பால்-மோருக்கு விசேடித்த பகுதியாயும் இது இருந்தது.

இப்பகுதி மக்கள் முற்காலத்தில் செல்வம் செல்வாக்குடன் இருந்தனர். இடைக்காலத்தில் பலர் வேறு இடங்களிற் குடியேறியதனாலும், போதிய கல்வி வசதி ஏற்படாமையாலும் இப்பகுதி அல்லற்பட நேர்ந்தது; வேறிடஞ் சென்றவர்கள் கலைமகள், திருமகள் கடாட்சம் ஒருங்கே பெற்று வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்.

இத்தியாதி இயல்புகளையுடைய இப்பகுதி 1950 ம் ஆண்டிற்கு முன் வெகு காலமாய்-மிகப் பிற்போக்கான நிலையில் வறுமையின் பிடியில் அகப்பட்டு வாழ வகை தெரியாது வாடியது; திண்டாடியது. எப்பொழுது நம் கிராமம் தலைதூக்கும்; நம்மவர் நலம்பெறுவர் என்று ஆர்வம்ததும்பிய வினா ஒவ்வொரு வாலிபர் உள்ளத்திலும் தோன்றியது. பல இன்னல்களையும் போக்குதற்கு ஒத்துழைக்கக் கருதி தைப் பொங்கலும் மூல நட்சத்திரமும் கூடிய சுபதினமாகிய 1950 ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதியில் ஊரதீவு மக்கள் ஒன்று கூடினார்கள். அதன் பயனாகப் புங்குடுதீவின் முதலாவது கிராம முன்னேற்றச் சங்கம் முளைத்தது. முளையைப் பயிராக்கிப் பயன்பெறவைப்பதில் தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு பெரிதும் துணைபுரிந்தார்.

நல்ல கிராமத்திற்குரிய நற்பண்புகள் பல புதிது புதிதாக வந்தன. பொருளாதாரத்தாற் துன்புற்ற மக்களை இன்புறுத்த, குடிசைக் கைத்தொழிலாகிய பாய் இழைக்கும் தொழிலுக்குத் தக்க பாதுகாப்புச் செய்யப்பட்டது; இதனால் வறுமை ஓரளவு தீர்ந்தது. ஏழைகட்கு நிவாரணப் பணம் சங்கம் எடுத்துக்கொடுத்தது; நிலமில்லார்க்கு நிலம் கொடுக்கச்செய்தது. குடிநீர் வசதி, மருத்துவ வசதி, வாசிகசாலை வசதி, வானொலி வசதி, விளையாட்டு நில வசதி பால்நிலைய வசதி, யெனப் பல முன்னேற்றப் பணிகள் கைக்கொள்ளப்பட்டன.

2 மைல் நீளமான ஒழுங்கைகள் திறக்கப்பட்டன. 5,000 ரூபா செலவில் அரசினரால் தெரு திருத்துவிக்கப்பட்டது. தேக வலிவுக்காட்சி, கலைக்காட்சி, இசை நடன நிகழ்ச்சியெனப் பல நுண்கலைகள் மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்து மகிழ்ச்சியை அளித்தன. சுருங்கச் சொன்னால் இருளில் இருந்த கிராமப் படிப்படியாக ஒளிபெற்றுத் தீவுப் பகுதியில் முதற்தரமான கிராம முன்னேற்றச் சங்கம் நடை பெறும் கிராமமாய்க் காட்சி அளித்தது; அளிக்கின்றது.

இக்காட்சியைக் கண்ணுற்று ஆசி பகரவும், சங்கம் 5,000 ரூபா செலவில் சுய உதவியைக் கொண்டு கட்டி முடித்த மண்டபத்தைத் திறந்து வைக்கவுமே மகா தேசாதிபதி வந்தார்கள்; வரவேற்பிற் பங்குபற்றினார்கள்; வாழ்த்தினார்கள். சுருங்கச் சொன்னால் "கவர்னர் வந்தகதை" கிராமம் ஒன்று இருளிலிருந்து ஒளி பெற்றது என்பதைக் கூறவந்த கதை. இக்கால ஜனநாயக அரசாங்கம் கிராம முன்னேற்றத்திற் காட்டும் சிரத்தையைச் செப்பவந்த கதை—என்றால் மிகையல்ல!

இ. க. க.



மகா தேசாதிபதி பிரசங்கம் செய்கிறார்; பகுதிக் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் அதைத் தமிழில் மொழிபெயர்க்கின்றார்; கதிரையில் இருப்பவர் புங்குடுதீவுக் கிராமச் சங்கத்தலைவர் ச. அம்பலவாணர். சுவர் அருகில் நிற்பவர் சங்கக் காரியதரிசி திரு. வே. செ. சுப்பிரமணியம்.

## குடியேற்றத் திட்டம்

[8 ம் பக்கத் தொடர்ச்சி ]

**மட்டக்களப்பு டிஸ்திறிக்**

**உனிச்சை**

இந்தக் குடியேற்ற இடத்தில் 122 குடியேற்ற வாசிகள் இருக்கின்றனர். பெரும் போகத்தில் இவர்கள் ஒழுங்காக நெல் வேளாண்மை செய்து வருகின்றனர். மேலும் தங்கள் மேட்டு நிலக் காணிகளையும் பண்படுத்தி வருகின்றனர். கிராமாபிவிருத்திச் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு நல்ல வேலை செய்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல் வாத்தியம்

**மிருதங்கம், முழவு, பேரிகை முதலியவற்றின் வரலாறு**



இலங்கையில் உபயோகிக்கப்படும் தோல் வாத்தியங்கள்

இலங்கையில் கோயில்களில் மேளம் அடித்தல் சப்த பூஜையென வழங்கப்படுகின்றது. இவ்வாசார முறை புராதன காலந்தொட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. உதாரணமாக, கண்டி தலதா மாளிகையில் தினந்தோறும் குறிப்பிட்ட இடைவேளைகளில் முழவுகள் கொட்டுவதைக் கேட்கலாம். மேளக்காரர்கள் தலதா மாளிகையிலேயே படுத்துறங்கி காலை 5½ மணிக்கு எழுந்து முழவுகளை அடிப்பர். தம்மட்டமும் நாதசுரமும் காலைப் பூசையில் உபயோகிக்கப்படும்.

## இலங்கையிலுள்ள தோல் வாத்தியம்

இலங்கையில் உபயோகிக்கப்படும் தோல் வாத்தியங்களாவன : தவில் ; இது கோயில் மேளவாத்தியங்களில் ஒன்று ; பூசா காலங்களிலும், உற்சவங்களிலும், திருமணம், பண்டிகை முதலிய சடங்குகளிலும், நாதசுரம், ஒத்து, தாளம் என்னும் கருவிகளுடன் கொட்டப்படுகின்றது. பேரி இரு கைகளாலும் முழக்கப்படும் ஒருவகை வாத்தியமாகும். வலக்கையால் முழக்கப்படும் சப்தம் அதிகரித்தும், இடக்கையால் முழக்கப்படும் சப்தம் குறைந்துமிருக்கும்.

தம்மட்டம் என அழைக்கப்படும் தோற் கருவி வளைந்த இரு தடிகளைக் கொண்டு முழக்கப்படும். இடது தம்மட்டம் வாரால் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றது. இரு தடிகளாலும் இடது தம்மட்டம் கொட்டப்படும். வலது தம்மட்டம் இறுக்கிக் கட்டப்படாதிருப்பதால் நல்ல சப்தம் தொனிப்பதில்லை. இது இடையிடையே முழக்கப்படும்.

கண்டிய நடன முறைகள் பாட்டோடு சேர்ந்தேயிருக்கின்றன ; பாடுபவர்கள் உடுக்கை என்னும் இடை சுருங்கிய ஒருவகைப் பறையைக் கையால் முழக்குவர். அவர்கள் இன்னுமொரு கருவியையும் உபயோகிக்கின்றனர். இது சிங்களத்தில் " பன் தேறுவ " என அழைக்கப்படும். தாளமும் கண்டிய நடனத்தின் முக்கிய ஒரு அம்சமாகும்.

கீழ்வரும் இருபத்திநான்கு வகை முழவுகளும் பேரிகை, தவில், தம்மட்டம், உடுக்கை ஆகிய பெரும் பிரிவுகளில் அடங்குகின்றன. இவைகளின் சிங்களப் பெயர்களைக் கீழே தருகிறேம் :—

தாள பெற, பட்ட பெற, டெக்க பெற, றவுத்திர பெற, யுத்றது பெற, பெரும் பெற, தெதுறு பெற, கோஷ பெற, கொக்குறு பெற, எகெஸ் பெற, கன்பெற, மிஹிங்கு பெற, டெக்கி, உடெக்கி அலிங்க பெற, உதக்கபெற, தினவ பெற, பன பெற, தெந்தின பெற, துந்துபி பெற, மத்தள பெற, முட்டிங்க பெற, முரஜ பெற, ஒளக்கிய பெற, தம்மெட்ட, மினிபெற.

முழவு, நடனத்திற்கு மாத்திரமல்லாது கண்டாமணிக்குப் பதிலாகவும், பறைசாற்றுவதற்கும், நேரங்குறிப்பதற்கும், நாளாந்தச் செய்தி அறிவிப்பிற்கும் உபயோகிக்கப்படுகின்றது. முழவு, சமய வழிபாட்டில் உபயோகிக்கப்படுவதோடு பேய் ஓட்டும் நடனத்திலும், விழாக்களிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கண்டிய நடனத்தின் பிரதான அம்சமாகவும் இது திகழ்கின்றது.

## முழவு

முழவைப்போன்று மற்ற எந்தவாத்தியமும் புராதன காலந்தொட்டு இன்றுவரை வழங்கி வரப்படவில்லையெனக் கருதலாம். முழவு பொதுவாக போர்முரசாகக் கொள்ளப்பட்டபோதிலும் பலதிறப்பட்ட மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்களிலும் சமய வழிபாடுகளிலும் புராதன காலமுதல் இடம் பெற்றுவருகின்றது. எகிப்திய, கிரேக்க, ரோமச் சிற்பங்களும், இலக்கியங்களும் முழவு இந்நாடுகளில் உபயோகிக்கப்பட்டது என்பதைக் குறிக்கின்றன. பெரிய முழவுகள் சீனுவிலும், பர்மாவிலும் வழிபாடுகளுக்கென உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. கொன்பியூஸியஸ் காலத்திலும் முழவு வழக்கிலிருந்திருக்கின்றது. சீனுவிலிருந்தே யப்பானுக்கு முழவு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

வேதகால இந்தியாவிலும் முழவு இடம் பெற்றிருப்பதோடு வேதத்திலும் குறிக்கப்பட்டிருக்கின்றது. முழவு சாதாரணமாக இசைக் கருவியாக உபயோகிக்கப்படுவதுமல்லாமல், ஆபத்துகளிலிருந்து தப்புவதற்கும், எதிரிகளை விரட்டுவதற்கும் கொட்டப்படுகின்றது. பலி போர்க்களம் ஆதியாம் இடங்களிலும் முழவு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இந்து, பௌத்த விழாக்களில் முழவு கொட்டப்படுகின்றது.

பிரான்சஸ் டென்ஸ்மோர் என்பார் (ஐக்கிய அமெரிக்க இசைக்கருவிகளின் கைந்நூல்) கூறுவதாவது :— "முழவுகளின் சரித்திரத்தையும், அபிவிருத்தியையும் சம்பூரணமாகக் கவனிக்கும்பொழுது, பொதுவாக முழவுகளின் நீளத்தைக்குறைத்து இருபுறத்தின் விட்டத்தையும் கூட்டும் நாட்டம் காட்டப்படுவது தெரியவரும்"

"தபேலா" ஒரு "தலை"யுடையதாகவும், மிருதங்கம் இரு "தலை"களையுடையதாகவும் காணப்படுகின்றன. ஒரு புறம் நன்கு விரிந்து நீளத்தில் குறுகியிருக்கும் மரத்தால் இது செய்யப்படுகின்றது. தோற்படம் சுற்றிவர வாரினால் கட்டப்பட்டு எட்டு சிறுகட்டைகளால் தோல் இறுக்கப்படும். குங்கிலியமும், எண்ணெயும் கலந்த ஒரு வகைப் பசை தோலின் மத்தியில் பூசப்பட்டிருக்கும். முழவுகளிலிருந்து எழுப்பப்படும் சப்தத்தைக் கட்டுப்படுத்த இப்பசை பூசப்படுகின்றதெனக் கருத முடியும். வாத்தியக்காரர்கள் இதையும், மிருதங்கத்தையுமே பிரதான கருவிகளாகவும், மற்றவைகளை இவற்றின் உதவிக் கருவிகளாகவும் கணிக்கின்றனர்.

### மிருதங்கம்

எல்லா இசைக்கருவிகளிலும் இந்திய முழவுகளின் தந்தையெனக் கருதப்படும் மிருதங்கமே பிரதானமானதாகும் எனவும், இதுவே மிகவும் புராதன உருவத்தில் காணப்படுகின்றதெனவும் கவியரசர் தாகூர் கூறுகின்றார். மேலும் அவர் கூறுவதாவது :—"வெல்லக் கூடாத பராக்கிரமம் வாய்ந்த திரிபுராசுரனோடு பொருது மாகதேவர் வெற்றி பெற்ற பொழுது இந்திரன் முதலாம் எல்லாத் தேவர்களுடன் சேர்ந்து களிநடம் புரிந்தார். அப்பொழுது பிரமன் மிருதங்கத்தைத் தேர்ந்தெடுத்தாராம்." இவ்விசைக்கருவி வீணையோடு சேர்த்துக் கொட்டப்படும். சல்லரி என்றழைக்கப்பட்டு வந்த பழைய கைப்பறையே இன்று கஞ்சிராவென்னும் பெயருடன் விளங்குகின்றது. இக்கருவி கிலுகிலுவென்னும் ஒலியை உண்டாக்குகின்றது.

முழவிற்கு உபயோகிக்கப்படும் தோல் பலதரப்பட்டதாகும். சாதாரணமாக மாட்டுத் தோலே முழவு கட்ட உபயோகிக்கப்பட்டாலும், பன்றி, மான், குதிரை முதலியவைகளின் தோலும் உபயோகிக்கப்படுகின்றது. முழவின் "தலை" செய்யப்படும் முறை மிகவும் நுணுக்கமானதொன்றாகும்.

### தமிழர் தோல் கருவிகள்

புதுவை. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த திரு. பி. கோதண்டராமன் அவர்கள் தமிழரின் இசைக் கருவிகளைப் பற்றி தனது நூலில் குறிப்பதைக் கீழே தருகின்றோம்.

"பண்டைத் தமிழர்களிடையே தோலால் செய்யப்பட்ட முப்பத்தொரு முழவுகள் வழங்கின என்று சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலிருந்து தெரிய வருகிறது. புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனார் அகப்பொருள் ஆகிய பழைய நூல்கள் வேறு சில முழவுகளின் பெயரையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு கூடியிருந்தன எனவும் தெரிகிறது. **படகம், பேரிகை,** இடக்கையினுல் அடிக்கப்படும் பெருமுரசாகிய **இடக்கை,** மத்தென்ற ஓசையை எழுப்பும் **மத்தளம்,** சல்லென்ற ஓசையையுடைய **ஒல்லிகை,** கரடியின் முழக்கம் போன்று ஒலிக்கும் தட்டைப்பறையான **கரடிகை,** பாதி உருண்டை வடிவமும் உரத்த ஓசையுமுடைய பெரும் பறையான **குடமுழா** ஆகிய முழவுகள் **அகமுழவு** எனப் பெயர் பெற்று முதல் தரமானவையென மதிக்கப்பட்டன. **தக்கை, தண்ணுமை, தகுணிச்சம்** என்னும் மூன்று வகைகள் **அகப்புறமுழவெனப்** பெயர் பெற்று நடுத்தரமானவை எனக் கருதப்பட்டன. **கணப்பறை** என்னும் **புறமுழவு** கீழ்த்தரமானதென்றும் இரங்கற்பறையான **நெய்தற்பறை, புறப்புற முழவு** என்றும் கூறப்பட்டன.

மேலும், முரசு, நிசாளம், துடுமை, திமிலை என்னும் நான்கும் **வீரமுரசு** எனப்பட்டன. முரசு மிகப் பெருமை வாய்ந்ததாகும். தமிழர் போர்த்துணையாகக் கொண்ட பல கருவிகளுள் தம் வீர முரசினைத் தெய்வத்தன்மையுடையதாகப் பாராட்டியுள்ளனர். "பலி பெறு முரசம்" எனப் புறநானூறு கூறுவதால் அதற்குப் பலியிட்டனர் எனத் தெரிகிறது. அரசன் அதை அரண்மனையில் வைத்துப் பூசித்து வந்தான். இவ்வீர முரசுடன், **மணமுரசு, கொடை முரசு,** என்னுனும் முரசு வகைகளும், **நாழிகை முழவு, காலை முழவு** எனக் காலத்தைத் தெரிவிக்கும் இரண்டு முரசுவகைகளும் இருந்தன. யாமங்கள் தோறும் கொட்டப்படும் பறைகளும் இருந்தன.

இன்னும் இடைசுருங்கிய பறையான **உடுக்கை** மொகு மொகுவென்று ஒலிக்கும் **தமருகம்,** முல்லைத் திணைப் பறையான **தடாரி,** குறிஞ்சி நிலப்பறையான **தொண்டகம்,** மருத நிலப்பறையான **கிணைப்பறை,** நெய்தல் நிலப்பறையான **மீன்கோட்பறை,** பாலைப் பறையான **நிரைகோட்பறை,** ஒரு கட் பறைகளான **பதலை, மொந்தை,** கைப்பறையான **விரலேறு,** செய்திகளை நகரத்தாருக்கு அறிவிக்கும் பறையான **கோட்பறை,** பகைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிடமிருந்து ஆநிரையைக் கவரும் போது அடிக்கும் **ஆகோட்பறை, பெரும்பறை** முதலியனவும் வழங் கின.

இவ்வண்ணமாகப் பழைய நூல் களில் காணப்படும் எண்ணிறந்த பல வகைத் தோற் கருவிகளைப்பற்றிய விரிவான செய்திகளை இக்காலத்தில் நாம் சரிவர அறிந்து கொள்ளமுடி யாதவர்களாக இருக்கிறோம். ஆயி னும் அவற்றுள் சிலவேனும் இக் காலத்தில் நம்மிடையே வழங்கி வரு வது கண்கூடு. நாட்டுப் புறங்களில் இன்னும் பலவிதமான பழங்காலத் தோற் கருவிகள் வழங்குகின்றன. மணக்கோலம், பிணக்கோலங்களி லும் தெருக் கூத்துகளிலும் கோயில் திருவிழாக்களிலும் **தப்பட்டை, தவில், துடி, தமுக்கு, டமாரம், கொட்டி, மத்தளம், சிடுசிடு, உறுமி, உடுக்கை, நகார், பம்பை, பேரி, சல்லரி, மல்லாரி, மிருதங்கம்** முதலிய பலவித மான பறைகள் முழங்குகின்றன.

**உடல்** என்பது கோயிலுக்குள்ளேயே வாசிக்கப்படும் ஒருவித வாத்தியம். இது அமைப்பில் தவிலைப் போலவே இருக்கும். ஆனல் அதன் ஒலி ஓங்காரத் தொனியை ஒத்திருக்கும். இதைப் பூசாகாலங்களில் மட்டுமே அடிப்பார்கள்.

**டமாரம்**—இது ஒரு வகையான சிறு முரசு. உற்சவ விக்கிரகங்கள் ஊர் வலமாக எடுத்துச் செல்லப்படும் போது இரண்டு டமாரங்களை இணைத்து எருதின் மீதேற்றி அடித்துச் செல் வர்.

**மிருதங்கம்** என்பது இசையரங் கிலும் பஜனையிலும் கதா காலட் சேபத்திலும் வாய்ப்பாட்டுக்குப் பக்க வாத்தியமாகவும், தாள லயத்திற்கும் நுட்பமான சுருதி பேதங்களுக்கும் இன்றியமையாததாயும் வெகுகால மாகப் பழக்கத்தில் இருந்து வரும் ஓர் இன்னிசைக் கருவியாகும். ஒலி யின் தத்துவங்களை நன்குணர்ந்த நம் முன்னோர்கள் தங்களது நீண்ட கால அனுபவத்தைக் கொண்டு, கரடு முர டாக ஒலிக்கும் தன்மையனவான பறைகளில் பல சோதனைகள் செய்து பார்த்து இறுதியில் இன்னிசையொலி க்கும் இக்கருவியை மாற்றியமைத் திருக்க வேண்டுமென்பது தெளிவு. இக்கருவியின் சித்திரம் அஜந்தா ஓவி யங்களில் காணப்படுவதும், தில்லை நட ராசர் கோயிலில் பரத நாட்டிய சாத் திரத்தின் நான்காவது அத்தியா யத்தை அப்படியே கல்லில் செதுக்கிய சிற்பிகள் "லலாட திலகம்" என் னும் பெயருடைய சிற்பமொன்றில் ஒரு நடிகையோடு இரண்டு பாடகர் மிரு தங்கம் வாசிப்பதைச் சித்திரித்திருப் பதும் இதன் தொன்மையையும் சிறப் பையும் வலியுறுத்துவனவாகும்.

மிருதங்கம் என்னும் தொடர்ச் சொல்லுக்கு மண்—உடல் என்பது பொருளாதலால் இதன் உடல் ஆதியில் மண்ணால் செய்யப்பட்டி ருக்கவேண்டும். இப்போது இது பலா அல்லது தேக்கின் ஒரே கட்டையிலி ருந்து குடைந்தெடுக்கப்படுகின்றது. இரு வாய்களையும் மூடும் தோல்கள் தோல் வளையங்களுடன் பிணைக்கப்பட் டுத் தோல் வார்களால் இறுக்கிக் கட்டப்படுகின்றன.

மிருதங்கத்தின் வலது வாய் ஒரே மையமுள்ள மூன்று தோல் அடுக்கு களால் ஆனது. வெளி வட்டத்தை மீட்டுத் தோல் என்றும், உள் வட் டத்தைச் சாப்புத் தோல் என்றும் கூறுவர். வெளி வட்டத்திற்குக் கன் றின் தோலையும் உள் வட்டத்திற்கு ஆட்டின் தோலையும் உபயோகிப்பர். சாப்புத் தோலின் மையத்தில் எப் போதும் கறுப்புப் பசை வட்டமாகத் தடவப்பட்டிருக்கும். பசை நடுவே கனமாயும் ஓரங்களில் இலேசாயுமிருக் கும்.



கொழும்பு நூதனசாலையிலுள்ள புராதன தம்மட்டமும் தவிலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள்வேத வைத்தியமணி

# திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்கள்

**தோற்றம்: 13-1-1904 மறைவு: 3-2-1953**

இலங்கையில் தலை சிறந்த ஆயுள் வேத வைத்தியராக விளங்கிய திரு. முத்துக்குமாரு கதிரவேற்பிள்ளையவர்கள் 3-2-53 செவ்வாய்க்கிழமை திடீரெனக் காலமானார் என்ற செய்தி காட்டுத் தீபோல் அதிவிரைவில் நாடெங்கும் பரவியது. இந்த துக்க செய்தியைக் கேட்டோர் யாவரும் தங்கள் உடன்பிறந்தார் ஒருவரை இழந்துவிட்டதாகவே உணர்ந்து கலங்கினர். எல்லார்க்கும் நல்லனாய் வாழ்ந்த இப்பெரு மகனின் பிரிவை மக்கள் எளிதில் மறந்துவிட முடியாது தவிக்கின்றனர்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன் !

எனும் பொய்யா மொழிக்கேற்ப வாழ்க்கை நடத்திய இப்பெரியார் பிரிவு நம் நாட்டு மக்களைத் துக்க சாகரத்தில் ஆழ்த்திவிட்டது. மின்னுமல் முழங்காமல் வந்த இப்பேரிடியை மக்கள் எவ்வாறு சகிக்கமுடியும்.

**கஸ்தூரியார் வளவு**

யாழ்ப்பாணத்திலே ஆயுள் வேத வைத்தியத்திற்குப் புகழ்பெற்ற ஊர் சுதுமலை. இவ்வூரில் வேலாயுதர், சின்னத் தம்பி, கதிரவேற்பிள்ளை ஆகியோர் வாழையடி வாழையாக வைத்தியத் துறையில் தொண்டாற்றி வந்தனர். திரு. கதிரவேற்பிள்ளையவர்களின் அருந்தவப் புதல்வராய வதரித்த திரு. முத்துக்குமாரு அவர்கள் ஆயுள்வேத வைத்தியத் துறையில் நந்தாமணி விளக்காகத் திகழ்ந்தார்கள். அக்காலத்தில் வண்ணார்பண்ணையில் கஸ்தூரியார் வேலுப்பிள்ளையவர்களும் சிறந்த வைத்தியராக விளங்கினர். இவர் தம் புதல்வியை திரு. முத்துக்குமாரு அவர்களுக்கு மணமுடித்து வைத்தார்கள். இதன் பயனாக திரு. முத்துக்குமாரு அவர்கள் கஸ்தூரியார் வளவில் தங்கி, பல்லாயிரக் கணக்கான நோயாளருக்குச் சிகிச்சை செய்து, புகழ்பெற்ற வைத்தியராக விளங்கினர். இலங்கையில் ஆயுள் வேத வைத்தியத்துக்கு ஒரு தனிப் பெருமையை ஈட்டிக்கொடுத்தவர் திரு. முத்துக்குமாரு அவர்களேயென்பதற்கையமில்லை. இறைவனிடத்து இடையறு அன்பு பூண்ட சிவபக்தர். சீரிய ஒழுக்கமுடையவர். ஏழைகளின் இன்னல் போக்கும் கருணை வள்ளல். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த வைத்தியரத்னம் திரு.



ஆயுள்வேத வைத்தியமணி
திரு. மு. கதிரவேற்பிள்ளை

முத்துக்குமாரு அவர்களின் தவப் பயனாகவும், யாழ்ப்பாண மக்கள் செய்த பெருந்தவப்பயனாகவும் உதித்தவரே நம் கதிரவேற்பிள்ளையவர்கள். இவர் இளமையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி பயின்று, பின்னர் சென்னைக்குச் சென்று ஆயுள்வேத வைத்திய கல்லூரியிற் படித்து வந்தார். இலங்கை முழுவதிலும் வைத்திய சேவை புரிந்துவந்த திரு. முத்துக்குமாரு எனும் புண்ணிய புருஷன் 1930 ம் ஆண்டில் திடீரென நம்மைவிட்டுப் பிரிந்தார். இப்பெருந் தகையார் பிரிவினால் மக்கள் மனங் கலங்கினர் ஏனினும், அவர் செய்துவந்த பணியைத் தொடர்ந்து நடாத்துதற்கு ஓர் அருமைப் புதல்வன் இருப்பதுகண்டு ஆறுதலடைந்தனர். எனவே திரு. கதிரவேற் பிள்ளையவர்களும் தமது தந்தையாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றியே பயபக்தியுடன் இப்பாரிய பொறுப்பையேற்றார்.

மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

எனும் தெய்வப் புலவர் திருவாக்கிற்கு ஏற்ப, வைத்தியத் தொண்டாற்றத் தொடங்கித் தம் தந்தையாரின் புகழை மேன்மேலும் நிலைநாட்டிவந்தார். குலவித்தை கல்லாமற் பாகம் படுமாகையால், ஆயுள் வேத வைத்திய பரம்பரையில் உதித்த திரு. கதிரவேற் பிள்ளையவர்கள் சிறந்த வைத்தியராக விளங்கியது உண்மைதான். ஆனால் அவர் அச்சேவையை "**என் கடன் பணி செய்து கிடப்பதே**" எனும் உயரிய நோக்குடன் புரிந்து வந்ததனாலேயே உலகம் அவரைப்போற்றுகின்றது.

நோயினால் மக்கள் படும் துன்பம் துடைப்பது தம் கடமையெனக் கருதி அல்லும் பகலும் அயராது தொண்டாற்றி வந்தாரே யன்றி, அதனையிட்டுப் பணத்தை வாரி அள்ளி மூட்டையாகக் கட்டிவைக்கும் பேராசையுடன் அவர் இத்தொழிலில் ஈடுபடவில்லை. செல்வர், வறியர் என்ற பேதமின்றி யாவருடனும் இதமாய்ப் பேசும் இயல்பினர். கதியற்றுத் தம்மையடைந்த நோயாளருக்கு மருந்து இலவசமாகக்கொடுத்துதவியதுமன்றி, அவர்கள் அனுபானம், பத்தியபோசனம், பிரயாணச் செலவு என்பவற்றிற்காகவும் பொருளுதவி புரிந்துவந்தார். அன்பு, தயை, அடக்கம், சாந்தம், விருந்தோம்பல், தரும சிந்தை முதலிய சுகுணங்கள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெருமகனாக விளங்கினர். தமது சொந்தச் சுகத்தையும் பொருட்படுத்தாது, நோயாளரின் சேவைக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணஞ்செய்தார்.

(19 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வழிவகை"

**சென்னைப் பிரதமர், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், விசயதசமித் தினத்தில், அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பிய சொற்பெருக்கின் சுருக்கம்**

**( தமிழாக்கம் : சோ. வேலாயுதபிள்ளை )**

அன்புள்ள நேயர்களே !

இன்று "வழிவகை" என்னும் விஷயம்பற்றிப் பேச நினைக்கின்றேன். இது என்ன அஹிம்சை சம்பந்தமானதா ? ஒழுக்க நெறி சம்பந்தமானதா ? என்று நீங்கள் கேட்கக்கூடும். அப்படி ஒன்றும் இல்லை. பணம் சம்பந்தமான விஷயம். விசயதசமித் திருநாளில் நான் பேச எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பாருங்கள்!

பணம் உதிரத்தைப் போன்றது. தண்ணீரைப் போன்றதென்றும் சொல்லலாம். இரத்தமோ, தண்ணீரோ ஒரே இடத்தில் மண்டிக் கிடந்தால் துன்பத்தை விளைவிக்கும். ஓடிக்கொண்டிருந்தால், ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கும்.

பணம் சிலருடைய பொக்கிஷங்களில் அடைபட்டுக் கிடக்கின்றது. குட்டைகளில் தேங்கி நிற்கும் மண்டிநீர், கொசுவிற்கும் நுளம்பிற்கும் பிறப்பிடமாகி எவ்வாறு நோயைப் பரப்புகிறதோ அவ்வாறே, நல்ல சாதனங்களில் முதலிடப்படாத பணமும் விலைவாசிகளை உயரச்செய்து, ஊழல்களைப் பரப்பி, தீய பழக்கங்களையும் சமூகத்தில் வளர்க்கின்றது. அரசாங்கம் என்றால் ஏதோ வரி வசூல் செய்பவர்கள், குற்றத்திற்குத் தண்டனை விதிப்பவர்கள் என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது. நாட்டு மக்கள் அனைவருக்கும் தாயுந் தந்தையுமாக விளங்கும் அரசாங்கமே, சிறந்த அரசாங்கமாகும். மக்களின் சுக வாழ்விற்கும் செல்வத்திற்கும் அரசாங்கம் எவ்வளவோ வேலைகள் செய்து வருவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். நாங்கள்பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றத் தகுதி உள்ளோமானால் மக்கள் துன்பமின்றி வாழ வழிவகைகளைச் செய்தல் அவசியம்.

மகா ஜனங்களின் வாழ்க்கைத் தராதரம், கீழ்நிலையிலிருந்தது. அதனை உயர்த்த வேண்டியது அரசாங்கத்தின் முதல் வேலையாகியது. நெற்றி வெயர்வை நிலத்தில் விழப் பாடு படும் தொழிலாளியின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஆன மட்டுஞ் செய்தது. தேசிய செல்வம், பகிர்ந்து கொடுக்கப்பட்டதனால் முதலாளிவர்க்கத்திடம் சேர வேண்டிய பெருந் தொகைப் பணமெல்லாம் இன்று ஏழை உழவர்களின் கையில் சேர்ந்திருக்கின்றது. எங்கள் தேசத்துக் குடிஜனம் மிகப் பெரியதாய் இருப்பதனால் ஒவ்வொருவருக்கும் கிடைத்த தொகை சிறிதாக இருக்கலாம். எனினும், முன்னிருந்ததிலும் பார்க்க இப்பொழுது, ஏழை உழவர்களும் தொழிலாளிகளும் கூடிய சேமத்துடன் வாழ்கின்றனர். எதிர்காலத்தில் இவர்கள் மேலும் அதிக செல்வாக்குடன் வாழ இறைவன் அருள்புரிவானாக.

தேசமக்களின் அபிவிருத்திக்கு இன்னும் பல வேலைகளைச் செய்தல் அரசாங்கத்தின் பொறுப்பு. தேச நிர்வாகத்தில் சாதாரணமாக எழும் செலவுகளைத் தாங்குவதுமன்றி புதுப் புதுத் துறைகளிலும் முயற்சிகளைத் தொடங்க வேண்டியிருக்கின்றது. புதிய போக்குவரத்துச் சாதனங்களை அமைத்தல், புதிய வைத்திய சாலைகளை ஸ்தாபித்தல், பலமான ராணுவத்தை அமைத்தல் முதலான துறைகளில் நிர்மாணவேலைகளை ஆரம்பிப்பதற்குப் பெருந் தொகையான முதல் தேவை. செல்வம் படைத்த அந்நியர் எம் நாட்டை ஆண்ட பொழுது, தேசத்தின் செலவுகளையெல்லாம் தாங்கினர். இப்பொழுது நாங்களே எங்கள் நாட்டை ஆள்கின்றோம். எனவே, நிர்வாகச் செலவுகளையும் நாங்களே பொறுக்க வேண்டும். தேசிய செல்வத்தை அனுபவிப்பவர்கள் தேசச் செலவையும் பொறுக்க வேண்டும். இதைக் கேட்டு ஒருவரும் பயந்துவிட வேண்டாம்! தேசிய செல்வம் பெருந் தொகையாய் இருந்த பொழுதும் அதனைப் பகிர்ந்து கொடுத்த பொழுது, ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு பிடியே தேங்கியது. சிறு துளி பெரு வெள்ளம் போல், ஒவ்வொருவரும் சொற்பம், தேசாபிவிருத்திக்கு உதவினால் பெரும் முதலை இலகுவில் திரட்டிவிடலாம். ஏனென்றால், நாங்கள் கோடிக் கணக்கானவர்கள் இருக்கிறோம். தேசம் செழிப்பது எங்கள் எல்லோருடைய விருப்பமுமாகும்.

மேலும் இப்போதுள்ளபடியே நாம் இருந்து விட்டால் போதுமா ? சௌகரியங்கள் எல்லாம் பெருக வேண்டும். நீர்ப்பாசன வசதிகள் உண்டாக்கப்பட வேண்டும். புதிய அணைகள் கட்டப்பட வேண்டும். புதிய மின்சார ஸ்தாபனங்கள் அமைக்க வேண்டும். கைத்தொழில்களை விருத்தி செய்ய வேண்டும். வழக்கமாகக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இதற்கெல்லாம் செலவு செய்வதென்பது முடியாத காரியம். எனவே வேறொருவிதத்தில் முதலைத் திரட்டுதல் அவசியம். பழைய காலத்தில், செல்வம் படைத்த தனவந்தர்கள் அரசாங்கம் ஏற்படுத்திய கடன் நிதிகளில் தாராளமாகப் பணமுதலீடு செய்தனர். இதனால் நாட்டுக்கும் முதல் திரண்டது ; சோம்பிக் கிடந்த தனவந்தர்களின் பெரு நிதியும் அரசாங்கக் கடன்களில் நல்ல வட்டியை ஈட்டியது.

வானம் பொழியும் மழைநீரில் நாம் உபயோகித்து எஞ்சியதை நீர்த்தேக்கங்களில் சேமித்துவைத்தால் வேண்டிய வேளையில் நீரை இறைத்து உபயோகித்துக்கொள்ளலாம். நான் சற்றுமுன் சொல்லியதுபோல், தேசத்தின் பொக்கிஷமாகிய தேக்கத்தின் அடிமட்டம் வரையுள்ள செல்வம் எல்லாம் எடுத்து கோடிக்கணக்கான ஏழை மக்கள் கையில் பகிர்ந்து கொடுத்துவிட்டோம்.

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புப் பயிர்

ஸி. வான் டிலெவின்



நாற்று வயலிலிருந்து கரும்புத்தடிகள் நடுவதற்காக வெட்டப்படுகின்றன.

உலகத்தைச் சுற்றிப் பார்த்து வருபவனும் சீனி உற்பத்தியில் ஆவல் கொண்டவனுமான ஓர் மனிதன், இத்தீவில் சீனிக் கைத்தொழில் இல்லையென்பதையும் வருடந்தோறும் 100,000 தொன்களுக்கும் அதிகமான சீனி இங்கு இறக்குமதி செய்யப்பட வேண்டியிருப்பதையும் அறியும்போது ஆச்சரியப்படுவான். அண்மையிலுள்ள இந்திய தேசத்தில் அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட சீனிக்கைத்தொழில் நன்கு முன்னேற்ற மடைவதையும், இலங்கையைப் போலவே கரும்பு வளர்வதற்கேற்ற நிலைமைகளை அநேகமாகக் கொண்டிருக்கும் ஜாவா தீவு அநேக நூற்றாண்டுகளாக உலகின் சீனிக் கைத்தொழிலில் முதன்மை ஸ்தானம் வகுத்துள்ளமையையும் உணரும்போது அவனது சந்தேகம் மேலும் அதிகரிக்கும்.

இத்தீவில் அவன் சுற்றித்திரியும் போது, முற்காலத்தில் இங்கிருந்த சீனித் தொழிற்சாலைகளும் சீனித் தோட்டங்களிருந்த இடங்களும் அவனுக்குக் காட்டப்படும். சரித்திர வேலைகளை ஆராய்ந்து சிங்கள மன்னர்களின் காலத்தில் சீனி ஓரளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டதென்பதை அவன் காண்பான். பின்பு தற்போதைய நிலைமையை நோக்கும் அவன் இலங்கையின் கரும்புச் செடிகளுக்கு என்ன கேடு ஏற்பட்டது என்று ஒரு கேள்வியைக் கட்டாயம் எழுப்புவான்.

## தேவைகள்.

கரும்புச் செடி வளர்வதற்கு கூடிய உஷ்ணமும் போதிய சூரிய வெளிச்சமும் தேவை. அத்துடன் இது வளரும் காலத்தின் முதலாவது அரைவாசிக்காலத்தில் போதிய ஈரலிப்பும் அவசியம். இந்த ஈரலிப்பு, மழை மூலமாக அல்லது நீர்ப் பாய்ச்சும் தண்ணீர் மூலமாக ஏற்படலாம். கரும்பு நன்றாக வளரும் முதல் அரைவாசிக் காலத்தையடுத்து நல்ல வரட்சியான காலம் தோன்றவேண்டும். செடிகளைக் கத்தரித்து தண்டில் சீனிச்சத்து சேர விடுவதற்கு வரட்சியான காலமே உகந்ததாகும்.

எனவே, நீர்ப்பாய்ச்சல் வசதிகளுள்ள வரட்சி மண்டலத்தைச் சார்ந்த சிற்சில பிரதேசங்களே கரும்பு வளர்தற்குத் தகுந்தவையென்பது புலனாகின்றது. அப்படியிருந்தும் இத்தீவில் ஒரு நிரந்தரமான சீனிக்கைத்தொழிலை ஸ்தாபித்தற்கான சகல முயற்சிகளும் படுதோல்வியடைந்தனவெனச் சரித்திரம் குறிப்பிடுகின்றது. இத்தோல்வி பெரும்பாலும் ஒரு தப்பபிப்பிராயத்துக்குரியதென்பதே எமது கருத்தாகும். சீனிக் கைத்தொழிலை ஸ்தாபிக்க, செய்யவேண்டிய முக்கிய கருமம் ஒரு தொழிற்சாலையை நிறுவுவதுதான் என்பதே மேற்குறித்த தப்பபிப்பிராயமாகும். இது சரியானதல்ல. ஒரு தொழிற்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமானதெனினும் இது முழுத் தேவையினதும் ஒரு அங்கமாகவேயிருக்கிறது. கரும்பு வளர்த்தல் திட்டத்தில் பிரதான அம்சமாகக் கூட இதைக் கருதுதற்கில்லை. உயிருள்ள ஒரு தாவரத்தால் வயலில் சீனி உற்பத்தி செய்யப்படுகிறது; அதே சீனியைத் தண்டிலிருந்து வெறுமனே பிரித்தெடுக்கும் வேலைதான் தொழிற்சாலையில் நடைபெறுகிறது. தொழில்நுட்ப முன்னேற்றங்களினால், தற்பொழுது சீனித் தொழிற்சாலைகளின் வேலைத் திறமை உயர்வடைந்துள்ளது. அன்றியும் சீனியைத் தயாரிக்கும் முறை பூகோளசாஸ்திர நிலைமைகளுக்குப் புறம்பானதாகவுமிருக்கிறது. இதை வேறுவிதமாகச் சொல்லும்போது, எந்த ஒரு தொழிற்சாலையும் சரியாகக் கையாளப்பட்டால் அது கியூபா அல்லது ஜாவாவிலுள்ள தொழிற்சாலை அளிக்கும் பலனுக்குச் சமமான பலனை இலங்கையிலும் அளிக்கும் என்று கொள்ளலாம்.

வயலில், நிலைமைகள் முற்றிலும் வித்தியாசமானவையாகவிருக்கின்றன. கரும்பின் வளர்ச்சியும் தண்டில் சீனி சேருதலும் அநேக காரணங்களில் தங்கியிருக்கின்றன. இந்நாட்டில் கரும்பு உற்பத்திக்குச் சாதகமான சகல நிலைமைகளையும் பூரணமாகப் பயன்படுத்துதற்கு அநேக ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். உலகில் சீனி உற்பத்தி செய்யும் நாடுகளில் உற்பத்தி விகிதம் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு தொன்னுக்குக் குறைவான அளவிலிருந்து பத்துத் தொன்வரை அதிகரிக்கின்றது. இச் சந்தர்ப்பத்திலேயே ஆராய்ச்சி வேலைகளையும் அவற்றை அமுல் நடத்துவதையும் பற்றிய கருத்துக்கள் தோன்றுகின்றன. ஜாவா தீவில் ஒரு ஏக்கருக்கு சராசரி 0·7 தொன் விகிதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி, ஒரு நூற்றாண்டு காலத்தில் 7 தொன்னாக உயர்த்தப்பட்டதை இங்கு உதாரணமாகக் கூறலாம். அதிக உற்பத்தி, வயலின் நிலைமைகளில் தங்கியிருப்பது வெளிப்படை. இந்தக் காரணத்தை முன்னிட்டே இத் தீவில் சீனிக் கைத்தொழிலை ஆரம்பிக்கத் திட்டமிடும்போது அத் தொழிலுக்கு நிரந்தரமான பக்கபல வேலைகளுக்கு முதலிடமளிக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சி.**

இத்துறையில் 1951 ம் ஆண்டின் முதல் அரைவாசிக் காலத்தில் வயல் பரீட்சார்த்த வேலைகள் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் கரும்பு வளர்க்கும் திட்டத்[illegible]ருக்கும் கிறித்தல பிரதேசம் [illegible] போது காடடர்ந்திருப்பினும், [illegible] பிரதேசத்தின் மண்ணையும் சுவா[illegible]திய நிலைமைகளையும் கொண்டதும் அதற்கணித்தாயுள்ளதுமான பொலன்னறுவையில் பரீட்சார்த்த வேலைகள் நடத்தப்படுகின்றன. இவ்வேலைகளைச் செய்யும்போது சில மூலாதாரமான பிரச்னைகள் கவனிக்கப்படுகின்றன. முதலாவதாக கரும்பின் வகைகளைப்பற்றியும் பின்பு நடும் நேரம், வரிசைகளின் இடைவெளி, நிலத்தை வளம்படுத்துதல், பயிரிடும் முறைகள் முதலியவற்றைப் பற்றியும் கவனஞ்செலுத்தப்படுகின்றது.

இப்பரீட்சார்த்த மூலமாக, வளர்ந்த கரும்புகள் 1952 ம் ஆண்டில் சேகரிக்கப்பட்டபோது, சில உண்மைகள் வெளியாயின. உதாரணமாக, ஆரம்பத்தில் சிறந்தவையாகக் கருதப்பட்ட கரும்புவகைகள் (C. O. 419, C.O. 421, P. O. I. 2878) 10 சதவிகிதமான அல்லது அதற்குக் குறைந்த சீனிச் சத்தையே கொண்டிருந்தன. மேலும் இவை வரட்சிக்காலத்தில் வீசிய காற்றைத் தாங்கமுடியாதவையாகவுமிருந்தன. இவ்வருடம் நடைபெற்ற பரீட்சார்த்த வேலைகளின் பயனாக, மூன்று புதிய இனக் கரும்புகள் (C. O. 453, 527, 617) மிகச் சிறந்தவையாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றில் 12 சதவிகி[illegible] மேற்பட்ட சீனிச் சத்து இருந்[illegible] மாத்திரமன்றி, காற்றை எதிர்த்து நிற்கக்கூடிய [illegible]மும் காணப்பட்டது. பரீட்சார்த்த வேலைகள் மேலும் தொடர்ந்து நடாத்தப்படும். இப்புதிய இனங்கள் அவற்றின் தரத்தை இழக்காவிட்டால், எதிர்காலக் கரும்புத் திட்டத்தில் பெருமளவில் பயிரிடுவதற்கு அவை அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

Appropriate Technology Services
CAC
121, POINT...
NALLUR
No ...



நாற்றுச் சாலில் கரும்புத் தடிகள் நடப்படுகின்றன.



நடுவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ள மேடை, வரம்பு பிரித்துக் கட்டப்பட்டிருப்பதைக் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசைகளில் இடைவெளி விடல், பயிரிடும் நேரம், நிலத்தை வளப்படுத்தல் ஆதிய விடயங்கள்பற்றி நடத்தப்பட்ட பரீட்சார்த்த வேலைகளின் பயனுகவும் சில முக்கியமான உண்மைகள் தெரிந்து கொள்ளப்பட்டன. மேலும், இந் நாட்டின் நிலைமைகளுக்கேற்ற சீர் திருந்திய கரும்பு உற்பத்திமுறைகளும் கையாளப்பட்டுள்ளன. முதலாவது வருடத்தில் நடைபெற்ற பரீட்சார்த்தங்களின் பயனுக நல்ல தரமான கரும்பு உற்பத்திசெய்யப்பட்டுள்ளது. மேல் நாடுகளிலிருந்து வந்தவர்களின் அபிப்பிராயப்படி அக் கரும்பு இதர நாடுகளின் சிறந்த கரும்பினங்களோடு ஒப்பிடத்தக்கதாகும்.

**வயல் வேலை, நிர்வாகம், பயிற்சி**

திறமான சீனிக் கைத்தொழிலை ஸ்திரப்படுத்துவதில் ஆராய்ச்சி சம்பந்தமான வேலையே பூர்வாங்கமாகச் செய்யப்படவேண்டியதாகும். பின்னர் பரீட்சார்த்த வேலைகளின் பெறுபேறுகளை, வயல்வேலைகளிற் பயன்படுத்தல்வேண்டும். அநேக நாடுகளில், ஆராய்ச்சிக்கும் வயல் வேலைக்குமிடையில் பெரிய வித்தியாசமுண்டு. இதைத் தவிர்ப்பதற்கு கரும்பு வளர்க்கும் விஷயத்தில் அதை வளர்ப்பவர்களுக்கு ஆலோசனை கூறக்கூடிய அதிகாரிகள் அங்கம் வகிக்கும் ஒரு விஸ்தரிப்புச் சேவையை ஸ்தாபிக்கவேண்டியதே ஒரேயொரு மார்க்கமாகும். இத் தொடர்பில் இலங்கையிலுள்ள கரும் புறபத்தியாளர்களுக்கு வயல்வேலை அனுபவத்திலும், பரீட்சார்த்தமுறையால் அறிந்த உண்மைகளை வயல் வேலைகளிற் பிரயோகிப்பதிலும் பயிற்சியளிக்க உணவு விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த கரும்புச் செய்கை விற்பன்னர் திரு. எச். றீறிங்க் அவர்கள் பொலனறுவையில் தங்கியிருந்தார்கள்.

ஆராய்ச்சி, விஸ்தரிப்பு ஆகிய இரு ஆதார அம்சங்களின் முக்யத்துவத்தை மதிப்பிடுதல் சாத்தியமான காரியமன்று. பிறநாடுகளைக் கவனிக்கும்போது ஆராய்ச்சியிலும் விஸ்தரிப்பிலும், முழுக்கவனஞ் செலுத்தும் நாடுகள் உற்பத்தித் திறமையில் முதலிடம் வகிப்பதையும், அவ்விரண்டையும் அலட்சியம் செய்யும் நாடுகள் உற்பத்தித் திறமை குன்றியவையாகவிருப்பதையும் காணலாம்.

**நோய்த்தடுப்பு நிலையம்.**

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அநேக பயன்தரக்கூடிய இனங்களைத் தேடுவதில் ஒரு பெரிய பிரச்னை அடங்கியுள்ளது. இப்பிரச்னை எப்பொழுதும் திரும்பத் திரும்ப ஏற்படுவதொன்ருகும். சில இனங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே உண்டாகக்கூடியனவாகவும் சில 5 அல்லது பத்து வருடங்களுக்கிடையில் செழிப்புக்குறைந்து விடுவனவாகவுமிருக்கின்றன. நல்ல இனங்களுக்கும், செழிப்புக்குறையும் இனங்களுக்குமிடையில் தொடர்ந்து பயிரிடக்கூடிய ஒரு இனம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, உலகெங்குமுள்ள நல்லினக் கரும்புமரங்கள் இத்தீவில் பயிரிடப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் புதிய இனங்கள் பயிரிடப்பட்டும் வருகின்றன. இறக்குமதி செய்யப்படும் புதிய இனங்களுடன் வரும் புதிய நோய்களையும், கிருமிகளையும் தவிர்ப்பதற்கு தம்புல்லைக்கு அண்மையிலுள்ள காட்டில் கரும்பு நோய்த்தடுப்பு நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்தமாகப் பயிரிட வழங்குவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பு, இறக்குமதி செய்யப்படும் சகல இனக் கரும்புகளும் இங்கு வளர்க்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. இப்பொழுது 50 இனங்களுக்கு மேற்பட்டவை தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை தற்போது பயிரிடப்படும் இனங்களுக்குப் பதிலாக அவசரகாலத்தில் பயிரிடத்தக்க நல்லினத்தைச் சார்ந்தவையாகவிருக்கின்றன.

**அபிவிருத்திகள்.**

கடந்த இருபது வருடங்களாக இலங்கையின் வருடாந்தச் சீனி உபயோகம் அதிகரித்துக்கொண்டே வந்து இப்போது 150,000 தொன் வரை ஆகியுள்ளது. ஆராய்ச்சி, நிர்வாகம் என்பவற்றில் கவனஞ் செலுத்தப்பட்டால் ஒரு ஏக்கருக்கு 4 தொன் சீனி உற்பத்தியாக்கப்படலாமென பரீட்சார்த்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. எனவே, இலங்கை தனக்குத் தேவையான முழுச் சீனியையும் பெறுவதற்கு ஏறக்குறைய 40,000 ஏக்கர் தேவைப்படும். கிறித்தலை திட்டத்தில் 6,000 ஏக்கர் நிலம் சேர்த்துக்கொள்ளப்படும். இதில் 4,500 ஏக்கர் நிலத்தில் கரும்பும் 1,500 ஏக்கர் நிலத்தில் மாற்றுப் பயிர்களும் பயிரிடப்படும். ஒரு ஏக்கருக்கு 4 தொன் சீனி சராசரியாகப் பெறலாமென்று கருதினுல், இத்திட்டம் இத்தீவின் வருடாந்தத் தேவையின் எட்டிலொரு பங்கை அல்லது 18,000 தொன் சீனியை வருடந்தோறும் நமக்கு வழங்கும்.



1952ம் ஆண்டு நிகழ்ந்த சேமிப்பு இயக்கப் போட்டியில் மீசாலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்கம் தென்மராட்சிப் பிரிவில் முதன்மையாகப் பங்குபற்றி முதல் இடம் பெற்றபடியால் நகர சபையில் மகா தேசாதிபதி சோல்பரிப் பிரபு சமூகசங்க மகாநாட்டு முடிவில் ஓர் வெள்ளிக் கேடயத்தை சபைத் தலைவர் ஸ்ரீமான் R. T. சுப்பிரமணியம் அவர்களுக்கு அளிக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. மு கதிரவேற்பிள்ளை அவர்கள்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

கஸ்தூரியார் வளவிலுள்ள வைத்தியசாலைக்கு எந்த நேரத்திற்சென்றாலும், பண்டிதர்கள், புலவர்கள், வியாபாரிகள், டக்டர்கள் முதலியபல வகைப்பட்ட மக்கள் வெளித் திண்ணையில் கூடியிருப்பதைக் காணலாம். இத்தகைய சகலருடனும் அவரவர்களுக்கியைந்த முறையில் அளவளாவி மருந்து கொடுத்து அனுப்பி வைக்கும் காட்சியை யாம் இனிமேல் காணமுடியாது.

பரிகாரியார் உரையாடுவதைக் கேட்டுக்கொண்டிருப்பதே ஒரு தனி இன்பமாகும். தமிழ் இலக்கியம், சங்கீதம், சோதிடம், சமயம், உலக விவகாரம் ஆதியாம் துறைகளில் இவருக்கிருந்த அறிவைக் கண்டு வியக்காதார் இல்லை. இராப் பகலாக வைத்திய சேவையில் ஈடுபட்ட இப்பெருமகன் தமிழ் நாட்டிலுள்ள சிறந்த பத்திரிகைகளில் வெளி வரும் விஷயங்களை யெல்லாம் படிக்கத் தவறியதே கிடையாது. வைத்தியசேவையில் ஈடுபட்டிருந்தபோதிலும், தமிழ்ப் பண்பாட்டினை மறந்து வாழவில்லை. தமிழ் அபிவிருத்தியில் அதிக ஊக்கங்கொண்டிருந்தார். தமிழ் இசையிலும் அதிக நாட்டமுடையவராகவிருந்தார்.

திரு. கதிரவேற்பிள்ளையவர்கள் பேர்பெற்ற வைத்தியராக விளங்கியதுமன்றி, தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கி ஆடம்பரமற்ற வாழ்க்கையினை நடத்திவந்தார். சுதுமலையிலுள்ள தமது பரம்பரைக் கோயிலைப் பரிபாலிப்பதிலும் கவனம் செலுத்தினர். அவருடைய தூய்மையான வெள்ளையுடை அவர் தம் உள்ளத் தூய்மையினைப் பிரதிபலித்துக்காட்டியது.

வைத்தியத் திறமையும் நற்குண நற்செய்கைகளும் ஒருங்கு வாய்க்கப் பெற்ற டக்டர் கதிரவேற்பிள்ளையவர்கள் ஆயுள்வேத வைத்தியர் பதிவுச் சபையின் அங்கத்தவராகவும் ஔடத நூற் சபையின் அங்கத்தவராகவும் அரசினரால் நியமிக்கப்பெற்றார். சமீபத்தில் சுதேச வைத்திய சபையின் அங்கத்தவராகவும் சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டார். இவற்றால் அவர் அடிக்கடி கொழும்புக்கு வர நேரிட்டது. இதனையறிந்த கொழும்பு வாசிகள் இவர் தங்கியிருந்த இல்லத்திற்குச் சென்று சிகிச்சை பெறத் தொடங்கினார்கள். எனவே கொழும்புக்கு வந்தாலும் இவருக்குப் போதிய வேலை இருந்தது. இவர் இந்துக் கல்லூரி முகாமைச் சபையதிகாரிகளுள் ஒருவராகவும் தொண்டாற்றிவந்தார். இவ்வாறு பலர் உளத்தையும் கவர்ந்த பரிகாரியார் திடீரென மறைந்தது எங்கள் துர்ப்பாக்கியமே.

இவர் பிரிவாற்றுயரும் இவரின் சகோதரிகளான திருமதி. ப. கமலாம்பிகை, கா. இரத்தினம்மா, ஸ்ரீகாந்தா மகேஸ்வரி ஆகியவர்சட்கும், மைத்துனர்களான டக்டர் வீ. ரி. பசுபதி, வழக்கறிஞர் திரு. எம். ஆர். காராளசிங்கம், திரு. எம். ஸ்ரீகாந்தா, சி. சி. எஸ்., அவர்களுக்கும் எங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். கஸ்தூரியார் வளவில் வைத்தியம் தொடர்ந்து நடைபெற ஏற்ற ஒழுங்குகளை இவர்கள் ஒரு முகப்பட்டுச் செய்துவைப்பார்களென எதிர்பார்க்கிறோம்.



பிரதமரின் எகிப்து விஜயம் ; இடமிருந்து வலம் ; இலங்கைப் பிரதமர், கௌரவ. திரு. டட்லி சேனநாயகா ; எகிப்து பிரதமர், ஜெனரல் நஹிப்; நிதிமந்திரி கௌரவ. திரு. ஜே. ஆர். ஜயவர்தனா; [illegible] வெளிநாட்டு விவகார மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி, சேர் கந்தையா வைத்தியநாதன்; இலங்கைப்பிரதமரின் காரியதரிசி திரு. என். டபிள்யு. அத்துக்கோறளை ; இலங்கை மத்திய வங்கியின் பிரதி கவர்னர், திரு. என் யூ. ஜயவர்தனா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊர்

பண்டிதர் க. மயில்வாகனன், விவேகானந்த வித்தியாலயம், கொழும்பு

குழந்தைக்குத் தாயிடத்தில் பற்று, கன்றுக்குப் பசுவிடத்தில் பற்று. மக்களுக்கு உடைமைகளில் பற்று. இவையெல்லாம் இயல்பில் அமைந்த மூல ஆசைகளால் ஆவன என்பர் அகநூற் புலவோர். ஊர் குறித்து உண்டாகும் பற்றினை உடைமை காரணமாக எழுந்த பற்று என்றே சொல்லத் தோன்றுகிறது. நறு நீரும், பல்வளமும், குளிர்நிழலும் சான்றோரும் நிரம்பியுளதோ அன்றி உவர்நீரும், பஞ்சமும் வெறு வெயிலும் கயவரும் நிரம்பியுளதோ எத்தகையதாய் இருந்தாலும் என்ன, ஒவ்வொருவரும் தத்தம் ஊர்களைப் புகழ்ந்து கொண்டாடுதலைக் கேட்கின்றோம்.

எங்கள் ஊர் வட்டுக்கோட்டை என்று சொல்வதில் எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி. வட்டுக்கோட்டை யாழ்ப்பாண நகரின் மேற்குப் பாகத்தே, எட்டுமைல் தூரத்தில் விளங்கும் அழகிய கிராமம். குலமலையும் வளநதியும் இல்லையேனும் இயற்கையின் பிற அழகுகளையெல்லாம், இங்கு கண்டு களிக்கலாம். யான் அறிவதறியாச் சிறுவனாய் இருக்கும் போதெல்லாம் பழந்தரு மரங்களையும், பயிர்மிகு வயல்களையும் வானளாவ நிமிர்ந்து விளங்கும் கலைநிலையங்களையும் கண்டு மகிழ்வேன். காலைப்பொழுதெல்லாம் தேவாலயங்களின் மணியோடு வித்தியாலயங்களின் மணியும் கலந்து முழங்கும். அது கேட்டு எனது உள்ளம் பூரிக்கும். பல்லாண்டாகச் சைவமும் தமிழும் தம் இருகண்ணெனப் புரந்தவர் வாழ்ந்தது எம்மூர். பின்னுளில் பிறர் நலம்பேணும் கிறீத்துவப் பெரியார்கள் அறிவொளி பெருக்கித் தமிழொடு பிறமொழிபுரந்ததும் எம்மூர். எங்கள் நெஞ்சம் எவ்வூரும் இவ்வூருக்கிணையில்லையென்று மங்கல வாழ்த்துப் பாடும்.

நிற்க, யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர் சிறப்புற்றிருந்த காலத்தே தென்னிந்தியாவில் நின்றும் தூய தமிழ்க்குடிகளை அழைத்து வந்து ஆங்காங்கு கிராமங்கள் தோறும், குடியேற்றினர் என்பர். வையாபாடற் பதிப்பாசிரியர் இக்குடியேற்றம் கி.பி. முதலாம் நூற்றுண்டளவில் நிகழ்ந்ததாகக் கூறுவர். எம்மூரவர் தென்னிந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்த காலை தாம் உறைந்த பட்டுக்கோட்டை என்னும் பதியின் பெயரையும் தம்முடன் கொண்டுவந்ததாக அறிகின்றோம். பின்னுளில் பட்டுக்கோட்டை என்பதில் உள்ள பகரம் வகரமாகி வட்டுக்கோட்டை என வழங்கலாயிற்று என்பர்.

தமிழராவார் தாம் செல்லுமிடமெல்லாம், காடுகெடுத்து நாடாக்கியும் குளந்தொட்டு வளம் பெருக்கியும், ஆலயம் எடுத்து அமரர்ப் பேணியும் வதிதல் இயல்பு. இவ்வகையில் வட்டுக்கோட்டையில் வாழ்ந்த பண்டைக்குடிகள் சிறிதும் குறைந்தவர் அல்லர். அவர்கள் அமைத்த சைவாலயங்களுட் சில இன்றும் காட்சி தந்துகொண்டிருக்கின்றன.

செங்குட்டுவன் எனும் சேர வேந்தன் கண்ணகி தேவிக்குக் கோவிலெடுத்த காலத்தே, கடல் சூழ் இலங்கைக் கயவாகுவேந்தன் அவ்விழாவிற்குச் சென்றிருந்ததாகவும், விழாமுடிந்து தன் நாடு திரும்பிய காலத்தே ஆங்காங்கு கண்ணகி கோவில்கள் எடுப்பித்ததாகவும் கேட்கின்றோம். இவ்வாறே அமைந்த பழமை சான்ற கண்ணகியார் ஆலயம் ஒன்று எங்களூரில் உண்டு. அது போர்த்துக்கேயர் அக்கிரமத்தில் இருந்து போற்றப்படுவதன் பொருட்டு மாதா கோவிலென்று மறைத்துச் சொல்லப்பெற்று இன்றும் மாதாங்கோவில் என்றே வழங்கி வருகின்றது.

இலங்கையை அடைந்த போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பகுதிகளில் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்பமுயன்றதை யாவருமறிவர். அதன்பயனுக ஒலிவேரு எனும் போர்த்துக்கேய அதிபதி எங்கள் ஊரில் ஒருபெரும் கோவிலைக் கட்டினுன். குருமாருக்கு வீடும் அமைத்தான். இவ்வாறே போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 32 கோவில்களைக் கட்டி அவற்றின்மூலம் ஆட்சி நடாத்தியதாகவும், அப்பிரிவுகள் இன்றும் கோவில்பற்றுகள் என்று வழங்கி வருவதாகவும் சரித்திரம் சொல்லுகின்றது.

போர்த்துக்கேயரின் பின் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை என்? இலங்கையையும் அடிப்படுத்தினர்.

அவர்கள் வட்டுக்கோட்டையில் இருந்த கத்தோலிக்க தேவாலயத்தைத் தமதாக்கிப் புதுப்பித்துத் தங்கள் புரட்டத்தாந்து மதத்தைப் பரப்புவதில் முனைந்தனர். தம் முயற்சிக்குச் சாதகமாக எங்கள் ஊரில் ஒரு பாடசாலையையும் அமைத்தனர். அதில் 900 மாணவர்வரை கல்வி பயின்றதாக ஒல்லாந்த அறிக்கை கூறுகின்றது.

யாழ்ப்பாணம் ஆங்கிலர் ஆதிக்கத்திற்கு வந்தபோது சனங்களுக்குச் சமய விஷயத்திற் சுதந்திரம் வழங்கப் பெற்றதை எவரும் அறிவர். அப்போதெல்லாம், எங்களூரில் மாட்டுத் தொழுவங்களாகவும், வண்டிக்காலைகளாகவும் மாதா கோவில்களாகவும் கிடந்த சிவாலயங்கள் மீண்டும் பரிமளித்தன. புத்துயிர் பெற்றன. கிராமத்தவர் சைவம் சுடர்விடக் கண்டு களித்தனர்.

எங்கள் கிராம வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த கிறீத்தவப் பெரியார்கள் இயற்றிய தொண்டினைப் பற்றிக் கூருமல் இருக்க முடியாது. அவர்கள் வரவாலே எங்கள் ஊரில் நிலைத்திருந்த கருத்தற்ற பழக்க வழக்கங்களும், சாதிக்கட்டுப்பாடுகளும் அழிந்தொழிந்தன என்றல் மிகையல்ல. ஒருசிலரின் பரம்பரையுள் அடங்கிக்கிடந்த கல்வி எல்லாரிடமும் பரந்து சுடர்விடத் தொடங்கிற்று. ஏட்டில் எழுதிச்சலித்தவர்கள் அச்சில் உருவான புத்தகங்களைக் கண்டு களித்தனர். "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப் பரிகாரி" என்றிருந்த சுதேச வைத்தியம் மறுமலர்ச்சி பெற்றது. "ஏட்டையும் பெண்கள் தொடக் கூடாது" என எண்ணினவர்களும் "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்" தவர்களும் தலைகவிழ்ந்தனர். பெண்ணினம் பெருமை பெற்றது.

1817 ம் ஆண்டளவில் எங்கள் கிராமத்தில் பெண் கல்வி எப்படி இருந்த தென்பதை மிஷனரிமார் எழுதி வைத்த குறிப்பு நன்கு வெளியிடுகின்றது. அன்றியும் வணக்கத்திற்குரிய மூரென்னும் அமெரிக்க பண்டிதரின் மனைவியார் கிராமத்துட் சென்று பெண்களைப் படிப்பதற்கு அனுப்புங்கள் என்று கேட்டாராம், எங்களூர்த் தாயொருத்தி "அந்த விஷயத்தை இங்கே பேசவேண்டாம். பெண்கள் படிக்கும் வழக்கம் இவ்வூரில் இல்லை. படித்தால் விவாகம் செய்யச் சம்மதியார்கள்" என்று சொன்னாளாம். இக்குறிப்பு அமெரிக்க பண்டிதரின் மனைவியாரின் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பெற்றிருக்கின்றது. இத்தகைய நிலையில் இருந்த கிராமத்தில் 1821 ம் ஆண்டில் மாதர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டதாக அறிகின்றோம். இதற்கெல்லாம் காரணமாக இருந்த மிஷனரிமாருக்கு நாம் செய்யும் கைமாறு யாதும் உண்டோ ! இல்லை.

எங்கள் கிராமத்திற்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது செமினறி என வழங்கப் பெற்ற வட்டுக்கோட்டைச் சாத்திர சாலையாகும். வட்டுக்கோட்டையின் சரித்திரத்தில் செமினறி ஸ்தாபிக்கப்பெற்ற 1823 ம் ஆண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கது. இலங்கையின் ஏனைய பாகங்களிலோ ஆசியாக் கண்டத்திலோ இத்தகைய உயர்தர பாடசாலை ஒன்று அமைக்கப் பெறவில்லையென்று அறிஞர்கள் ஒரு முகமாகத் துணிந்து கூறும் போதெல்லாம் எங்கள் உள்ளம் பூரிக்கின்றது. இக்காலசாலையில் மாணவர்கள் பல வருடங்கள் தங்கி இருந்து கலை பயின்றனர். ஆங்கிலம் தமிழ் எனும் இரு பாஷைகளும் கற்பிக்கப்பெற்றன. திறமை சான்ற மாணவருக்கு சமஸ்கிருதம், இலத்தீன், கிரீக்கு எபிரேயம் முதலிய பழம்பெரு மொழிகள் பயிற்றப்பெற்றன. தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கும் சித்தாந்த வேதாந்த சாத்திரங்களுக்கும் ஆதரவு காட்டப்பெற்றது. ஆங்கிலத்தில் கணிதம், நியாயம், தத்துவம் முதலிய உயர் கலைகள் பயிற்றப்பெற்றன. யாழ்ப்பாணம் இலங்கை இந்தியா எனும் பல இடங்களில் நின்றும் அநேக மாணவர்கள் எங்களூரை நாடி வந்தனர். ஆனால், தாமரையின் மதுவைத் தவளைகள் அறியாதிருத்தல் போல் எம்மூரவர் இக்கலாசாலையால் கிடைக்கக் கூடிய முழுப் பலனையும் பெறுதொழிந்தனர். காரணம் சைவமதத்தில் கொண்ட பேரன்பேயாகும்.

இக்கலாசாலையை நடாத்திய அமெரிக்கன் போட் சங்கத்தார் 32 ஆண்டுகளின் பின் இதனை மூடினர். இக்கலாசாலையில் பயில்பவர் ஆங்கிலம் முதலிய உயர் கலைகளில் தேர்ச்சி பெற்று மேல் தரமான உத்தியோகங்களுக்குப் போய் விடுவதால் தங்கள் இலக்கு-சமய போதனைக்கு ஊழியர்களைப் பயிற்றுதல் நிறைவேறவில்லை என்று கருதியமையே காரணமாகும்.

ஆனாலும் மக்களின் கலை ஆர்வத்தால் செமினறி இருந்த இடத்திலேயே மீண்டும் 1856 ல் ஆங்கில மகா வித்தியா சாலை ஒன்று ஆரம்பிக்கப்பெற்றது. பின்னாளில் அதாவது 1872ல் மேற்படி மிஷன் வளவிலேயே யாழ்ப்பாணக் கல்லூரி அமைக்கப்பெற்றது. இக்கல்லூரியின் பெருமை யாவரும் அறிந்ததே !

இதுவரை எம் கிராமத்தில் கிறீத்தவப் பெரியார்கள் தம் மதத்தைப் பரப்ப முயன்ற வகையில் கலைப் பணி புரிந்தமையை அறிந்தோம். இத்தகைய சூழ்நிலையிலும் கிராமத்தவர் தம் புராதன மதத்தைக் காப்பதில் பேரார்வம் காட்டி வந்தனர். யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் தூண்டப்பெற்ற சைவ உணர்ச்சி எம்மூரிலும் வீறிட்டெழுந்தது. அதனால் நம்மிடையே ஒரு அம்பலவாண நாவலர் தோன்றினார். அவர் பெருமுயற்சியால், சைவாங்கில வித்தியாசாலை ஒன்று எம்மூரில் தோன்றிற்று. அம்பலவாண நாவலரைப் பற்றி பின்னர் கூறுவேன்.

ஆறுமுக நாவலர் பெருமானின் நன் முயற்சிக்கு எங்கிராமத்தவர் நல்லாக்கம் அளித்தனர். அவரின் சைவப் பணியைப் போற்றும் முகமாக, வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியில் நடந்த உபசரணைக் [illegible] செய்துதவ ரூபா 200 அன்பளிப்பாக வழங்கியதாகக் காலங்கண்ட முதியோர் கூறுவர்.

எங்களூரில் பண்டு தொட்டுத் தமிழ்ச் சித்த வைத்தியம் உயர்ந்த நிலையில் இருந்தது. 1916 ல் கனம் றிச்சேட் ஐயர் எனும் அமெரிக்க பெருமகனார், வட்டுக்கோட்டையில் ஓர் மருந்துச் சாலையை அமைத்தார். மாணவர் பலர்க்கும் ஆங்கில வைத்தியத்தில் பயிற்சி அளித்தார். செமினறியிலும் ஆங்கில வைத்தியம் கற்பிக்கப் பெற்றது. இருந்தும் சுதேச வைத்தியத்தைத் தலைமுறை தலைமுறையாக பாதுகாத்த பலர் எம்மூரில் வாழ்ந்தனர் என்று சொல்வதில் பெருமை அடைகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு காலஞ்சென்றவரும் 104 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து சுதேச வைத்தியம் செய்தவரும் விசேடமாக மனநோய் வைத்தியத்தில் புகழ்படைத்தவரும் சிறந்த ஆசார சீலரும்ஆகிய அப்பா என்பவரும் எங்கள் ஊரவரே. இவர் பௌத்திரர்கள் இன்றும்சிறந்த வைத்தியர்களாய் இருந்து தொண்டு புரிந்து வருகின்றனர்.

[தொடரும்]

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

## நவாலி வடக்கு சேவா சங்கம்

நாவலி வடக்கு சேவா சங்கத்தின் ஆதரவில் 1953 ம் ஆண்டு மாசி மாதம் 4 ந் திகதியில் புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் சங்க இல்லத்தில் தேசியக் கொடியும் சங்கக் கொடியும் ஏற்றப்பட்டு இலங்கை மக்கள் அடைந்துள்ள சுதந்திரத்தைப்பற்றிச் சங்கத் தலைவர் சொற்பொழிவாற்றினார். அதன்பின் பல சுதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. பல யுவர்களும் சிறுவர்களும் போட்டிகளில் பங்கு பற்றினார்கள். கிராமத்தைச் சேர்ந்த அனேகர் சமுகமளித்திருந்தார்கள். விளையாட்டு முடிவில் சிற்றுண்டிகளும் பானவகைகளும் வழங்கப்பட்டன. போட்டிகளில் வெற்றியடைந்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள இலக்கிய சரித்திரம் (5)

## ஜாதகக் கதைகள்

கதை சொல்லும் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; தொன்று தொட்டு வழக்கத்திலிருந்து வரும் பழக்கமாகும். தூக்கமின்றி இரவில் கஷ்டப்படும் குழந்தைகளை நித்திரையிலாழ்த்த பாட்டிகள் கதை சொல்வதை நாமறிவோம். குளிர் நாட்டில் வாழும் மக்கள் இரவில் தீமூட்டி அதைச் சுற்றிவர உட்கார்ந்து குளிர் காயும்பொழுது கதை சொல்வதாக புத்தக வாயிலாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். கதை ஒரு நாட்டில் மாத்திரம் பரவியிருக்கவில்லை. எல்லா நாடுகளிலும், எல்லாச் சாதியத்தினரிடையேயும் கதைகள் பரவியிருந்தன. இவை எட்டில் எழுதப்பட்டபொழுது ஜாதகக் கதைகளே முதன் முதல் எழுதப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இத்துணை பழமை வாய்ந்த ஜாதகக் கதைகளைப்பற்றி நாம் சிறிதுதெரிந்து கொள்வது அவசியமாகின்றது.

ஜாதகம் என்பதன் கருத்து உற்பத்தி அல்லது பிறப்பு ஆகும். புத்தரின் பெருமையை உலகறியச்செய்ய வேண்டுமென நினைத்த பௌத்த பிக்குகள் சித்தார்த்தர் புத்த பதவியை யடைய தனது ஒரு பிறப்பிலேயே ஏற்பாடு செய்யவில்லை; பன்முறை பிறந்து, பிறந்து நற்கருமங்களைச் செய்து அதன் பயனாக இப் பிறப்பில் புத்த பதவியை அடைந்தார் என்ற கருத்தை மக்கள் உள்ளத்தே தோற்றுவிப்பதற்காகப் பல கதைகளை எழுதினர். புத்தரின் முற்பிறப்பை விவரிப்பதனால் இக்கதைகள் ஜாதகக் கதைகள் எனப் பெயர் பெற்றன.

முதன்முதல் ஜாதகக் கதைகள் பாளி மொழியில் எழுதப்பட்டன. இந்திய மக்களில் பெரும்பாலோர் இராமாயணம், மகா பாரதம் என்ற நூல்களை எவ்வளவு ஊர்ந்கவைகளாகக் கருதுகின்றனரோ, அவ்விதமே பௌத்தர்கள் ஜாதகக் கதைகளைக் கருதுகின்றனர். உலக முஸ்லிம்கள் குரானையும், ஐரோப்பியர்களும் கிறிஸ்தவர்களும் பைபிளையும் எவ்வளவு தூரம் தெரிந்துகொண்டிருக்கின்றனரோ அவ்வளவு தூரம் பௌத்தர்கள் ஜாதகக் கதைகளைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கின்றனர். சிங்கள இலக்கியத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ஜாதகக் கதைகளைப்பற்றி முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்; ஏனெனில் சிங்கள மொழியின் சிறந்த இலக்கிய நூல்களெல்லாம் இக்கதைகளிலிருந்தே தோன்றியிருக்கின்றன. இங்கு நாம் பௌத்தர்களின் உள்ளம் கவர்ந்த ஜாதகக் கதைகளின் சிங்கள மொழி பெயர்ப்பைப் பற்றியே ஆராயத் துணிகின்றோம்.

ஜாதகப் புத்தகம் 550 கதைகளை அடக்கியிருக்கின்றது. இதனாலேயே இந்நூல் "பன்சிய பனஸ்ஜாத்தக" எனப் பெயர் பெறுகின்றது. இந்நூலை, தம்பதேனியிலிருந்து அரசு செலுத்திய நாலாம் பராக்கிரமபாகு மன்னன் சிங்களத்தில் மொழி பெயர்த்தான். இம்மன்னன் காலம் வரை பாளி மொழியிலிருந்த ஜாதகக் கதைகளைப் பண்டிதர்கள் தங்களின் அறிவைப் பகிரங்கப்படுத்த மாத்திரமே உபயோகித்தனர். பராக்கிரமபாகு மன்னன் இக்கதைகளை எளிய நடையிலே, தெள்ளிய பேச்சுச் சிங்களத்திலே எழுதினான். சிங்கள "பன்சிய பனஸ் ஜா(த்)தக" இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியது. சிங்களத்தில் பாளி ஜாதகக் கதைகள் மொழிபெயர்க்கப்படு முன்னரே இக்கதைகள் சிங்களக் காவியங்களில் இடம் பெற்றுவிட்டன. ஜாதகப் புத்தகம் பௌத்தர்களிடையே பரவியிருக்கும் புத்தமதத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. சிங்கள ஜாதகப் புத்தகம் சிங்கள இலக்கியத்தின் சிறந்த வசன நூலாகக் கருதப்படுகின்றது. இதிலுள்ள கதைகளெல்லாம் கர்ம வாதத்தையே உறுதிப்படுத்துகின்றன. ஜாதகக் கதைகள் எவ்வளவு தூரம் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன வென்பதை இந்தியாவின் சிறந்த கலைக் கோயில்களெல்லாம் இக்கதைகளையே உருவகப்படுத்திக் காட்டுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இலங்கையின் வர்ணச் சித்திரங்களும் ஜாதகக் கதைகளை நமக்கு நினைவூட்டுகின்றன.

**சஸதாவ : முவ தெவ்தாவ**

பாளி ஜாதகக் கதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படுமுன் சிங்களக் காவியங்களில் இக் கதைகள் இடம் பெற்றுவிட்டன எனக் குறிப்பிட்டோம். இவ்விதமாக இடம்பெற்ற கதைகள் இரண்டைப்பற்றி தற்பொழுது ஆராய்வோம். இவ்விரு கதைகளும் சஸதாவ, முவதெவ்தாவ என்ற இரு நூல்களை எழுதக் கையாளப்பட்டிருக்கின்றன. இந்நூல்கள் 12 ம் நூற்றுண்டில் எழுதப்பட்டவையென இதற்குமுன் குறிப்பிட்டோம்.

சஸதாவ, முவதெவ்தாவ என்ற இரு காவியங்களே சிங்களத்தில் எழுதப்பட்ட முதற் செய்யுள் நூல்களாம்.

சஸதாவ 293 செய்யுட்களாலானது; இந்நூலை எழுதிய புலவனின் பெயர் யாதெனத் தெரியவில்லை. இருப்பினும் இப்புலவன் இராமாயணம், சாகுந்தலம், மேகதூதம், இரகுவம்சம் குமார சம்பவம் ஆதியாம் சமஸ்கிருத நூல்களை நன்கு வாசித்து அவைகளிலுள்ள கருத்துக்களை இந்நூலில் புகுத்தியிருக்கிறான் என்பது தெரியவருகின்றது.

சஸதாவ தன்னுயிரைப் பிறருக்காக அர்ப்பணஞ் செய்த ஒரு முயலின் கதையை விவரிக்கின்றது.

இந்தியாவின் ஒரு பிரதேசத்தில் பிரம்மதத்தமன்னன் அரசு செலுத்தி வந்த காலத்திலே, இப்பிரதேசத்திற்குச் சமீபத்திலிருந்த காட்டிலே முயல், நரி, காகம், குரங்கு ஆதியாம் நான்கு பிராணிகள் நட்பாயிருந்து வந்தன. அவைகளில் முயல் மிகவும் தயாள குணமும், தியாகவுணர்ச்சியும் உள்ள பிராணியாயிருந்தது. ஒரு பௌர்ணமி தினத்தன்று முயல் மற்ற மூன்று நண்பர்களையும் அழைத்து, "பூரணை நாட்களில் பெரியார்கள் பிராணிகளை வதைசெய்வதில்லை யாதலால் நாமும் இன்று அவர்களைப் போல் விரதமிருப்பது நல்லது" எனக் கூறியது. மற்றப் பிராணிகளும் விரதமிருந்து அன்றைய தினத்தைக் கழிக்கத் தீர்மானித்தன. நரியும் காகமும் குரங்கும் தங்களின் தீர்மானத்தின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பகுதிச் சன சமூக நிலைய சமாசக் காரியதரிசி திரு. ச. பி. இராசையா அவர்கள் மகா தேசாதிபதிக்கு மாலை சூட்டுகின்றார்.

## யாழ்ப்பாணப் பகுதிச் சனசமூக நிலைய சமாசம்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுடன் தீவிர சேவையாற்றும் இச்சமாசம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டு வருதல் தமிழருக்குப் பெருமையளிப்பதாயிருக்கிறது. இதன் சேவைகளால் மக்களடையும் நன்மைகள் அளப்பில. தேச நலத்துக்காக ஆயுள் பரியந்தம் உழைக்க அவாக்கொண்ட அன்பர்கள் அங்கத்துவம் வகிக்கும் இச்சமாசம், மந்திரிகளதும், உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்களதும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. இலங்கையின் மகாதேசாதிபதியவர்கள் இதன் சேவைகளைக் கண்டு மகிழ அண்மையில் யாழ்ப்பாணஞ்சென்றிருந்தபொழுது, தர்க்கப்போட்டிகள், கதம்ப நிகழ்ச்சிகள், கோலாட்டங்கள், இசை நிகழ்ச்சிகள் என்பன அடங்கிய ஓர் பெரும் விழா நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட மகா தேசாதிபதியவர்கள் கூறிய ஆசியுரை பின்வருமாறு :—

"இன்று மாலை இந்தச் சனசமூக நிலைய சமாசத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு ஆனந்த பரவசமடைந்தேன். இந்த அமைப்பு முறைகளும் நடனங்களும் முதற்றரமாக இருந்தன. இந்தச் சமாச இயக்கத்தை இத்தனை மகிமையாக்கி இதனைத் திறம்பட நடத்தும் நிர்வாகிகளுக்கு நாட்டின் மக்கள் மனப்பூர்வமான நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்".

(சோல்பெரி).

---

படி அன்று நடக்கவில்லை. ஆனால் முயல் தான் கொண்ட விரதத்தில் சிறிதும் பிசகவில்லை. முயலின் சத்திய நெறியைப் பரிசோதிக்க இந்திரன் பிராமண வேஷத்துடன் முயலிடம் வந்தான். முயல் அன்று விரதமிருந்ததால் பிராமணனுக்குக் கொடுக்க அதனிடம் ஒன்றுமிருக்கவில்லை. உணவுகேட்ட பிராமணனுக்குத் தன்னையே அர்ப்பணிக்க முயல் துணிந்தது. பிராமணனிடம் தன்னையே உணவாகக் கொள்ளும்படி கூறி, நெருப்பு மூட்டி அதில் பாய்ந்தது. இந்திரன் நெருப்பினால் அதனுடம்பு தகியாவண்ணம் செய்து தெய்வ உருவத்துடன் காட்சியளித்து அதன் தியாகத்தை மெச்சி முயலின் உருவைச் சந்திரனில் பொறித்தான்.

மூவதெவ்தாவ 164 செய்யுட்களைக் கொண்டதாகும். இது ஜாதகக்கதைகளில் ஒன்றான "மகாதேவ ஜாதகத்தை" விவரிக்கின்றது. இக்கதையை நாம் பன்முறை தமிழ் இலக்கியத்தில் வாசித்திருக்கின்றோம். ஆனால் ஜாதகப் புத்தகத்தில் கதை பலவித வர்ணனைகளுடன் முடிகின்றது.

விதேக நாட்டிலே மியுலு புரத்திலிருந்து "மகாதேவ" என்னும் அரசன் ஆட்சிசெலுத்தி வந்தான். இவ்வரசன் எண்பத்திநாலாயிர வருடம் குமாரனாகவும், எண்பத்திநாலாயிர வருடம் இளவரசனாகவும், எண்பத்திநாலாயிர வருடம் அரசனாகவும் இருந்து எல்லாவித இன்பங்களையும் நுகர்ந்த பிறகு, ஒருநாள் தனது நாவிதனை அழைத்து தனது தலையில் நரைமயிர் தோன்றினால் உடனே தனக் கறிவிக்கும்படி கட்டளையிட்டான். நாவிதனும் அரசன் தலையில் நரைதோன்றும் நாளை எதிர் பார்த்திருந்தான். ஒருநாள் நாவிதன் அரசன் தலையில் ஒரு நரைமயிர் இருக்கக்கண்டு உடனே அரசனை வணங்கி இதைத் தெரிவித்தான். அரசன் நரைமயிரைப் பிடுங்கித் தன் கையில் வைக்குமாறு கூற, நாவிதனும் நரைமயிரைத் தங்கக் கத்திரிக்கோலால் கத்தரித்து அரசன் கையில் வைத்தான். அரசன் அதைக்கண்டதும் வியர்த்து விறுவிறுத்து இனி ஒரு கணமேனும் சிம்மாசனத்தில் வீற்றிருத்தல் தகுதியல்ல எனக் கருதி, தன் மூத்த குமாரனை அழைத்து "மகனே! எனக்கு வயதாகி விட்டது. நான் உலகின் இல்லற சுகங்களை நன்கு அனுபவித்துவிட்டேன். இனி பேரின்பத்தை அடைய விரும்புகின்றேன். ஆதலால் நீ அரசைக் கையேற்று நடத்துவாயாக" எனக் கூறித் துறவறம் பூண்டான். அரசன் நரைமயிரைக் கண்டதும், துறவு பூணச் செல்வதைக் கேள்விப்பட்ட, அமைச்சர்கள் மன்னனை அணுகி பல விதத்திலும் தடுக்க முயன்றனர். அரசன் அவர்களின் வேண்டுகோளை நிராகரித்து, அம்பவனத்தையடைந்து, துறவு பூண்டு, தவவழியில் எண்பத்திநாலாயிர வருடங்களைக் கழித்தான். அங்கிருந்து தவப்பயனால் பிரம்ம லோகம் சென்று மீண்டும் மியுலு புரத்தில் தோன்றி தனது வம்சத்தை விருத்திசெய்து, அதே அம்பவனத்தில் துறவு பூண்டிருந்து மீண்டும் பிரம்ம லோகத்தை அடைந்தான்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பக்கிங்ஹாம் அரண்மனையிலுள்ள சிம்மாசன அறையில் மாட்சிமை தங்கிய மகாராணி அவர்கள் சாம்ராச்சிய நாடுகளின் அமைச்சர்களுடன் நிற்பதைப் படத்திற் காணலாம். (இடமிருந்து வலம்) இலங்கைப் பிரதமர், கௌரவ. திரு. டட்லி சேனநாயகா ; தென் றொடீஷியப் பிரதமர், அதிகௌரவ. சேர் கொட்பிறி ஹகின்ஸ் ; நியூஜீலந்துப் பிரதமர், அதி கௌரவ எஸ். ஜி. ஹொலன்ட் ; ஐக்கிய இராச்சிய பிரதமர், அதி கௌரவ. வின்ஸ்டன் சர்ச்சில் ; மாட்சிமை தங்கிய மகாராணி ; ஆஸ்திரேலியப் பிரதமர், அதி கௌரவ. ஆர். ஜி. மென்ஸீஸ் ; கனேடியப் பிரதமர், அதி கௌரவ. எல். எஸ். செண்ட் லோரன்ஸ் ; தென்னுப்பிரிக்க நிதி அமைச்சர், கௌரவ திரு. என். ஸி. ஹவென்கா ; பாகிஸ்தான் பிரதமர், அல்ஹாஜ் கௌரவ சேர் குவாஜா நாஜி முத்தீன்; இந்திய நிதி அமைச்சர், கௌரவ. திரு. ஸி. டீ. தேஷ்முக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின்மூலம் இலங்கையடைந்த முன்னேற்றம்

(முன்தொடர்ச்சி)

## சமூக சேவைகள்

இலங்கையில் சமூக கஷ்டங்களுக்கு நிவாரணமளிப்பதற்காக திட்டம் வகுத்து அமைக்கப்பட்ட முயற்சிகள், கடந்த 20 வருட காலத்துள் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டன. அது வரை, தர்மப் பணம், பிரத்தியேக நன்கொடைகள், அரசாங்க நன்கொடைகள், இலவச வைத்திய உதவிகள் என்பவற்றின்மூலமாக மாத்திரம் கஷ்டத்துக்குட்பட்ட சமூகத்துக்கு நிவாரணமளிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடி காலமான, 1930 ம் ஆண்டில் இதர நாடுகளிற் போன்று இங்கும் ஏற்பட்ட மாபெரும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதைத் தொடர்ந்த இன்னல்களும், ஏழைகளுக்கு நிவாரணமளிக்கும் பிரச்னையைக் கிளப்பிவிட்டன. இதைச் சமாளிக்க அப்போதிருந்த சமூகசேவா வசதிகள் போதாதிருந்தமையால், நிலைமையைச் சீர்திருத்துதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கும், சமூக உதவிச் சேவையையும் அத்துடன் சம்பந்தப்பட்ட சேவைகளையும் பெருக்குவதற்கும் ஒருங்கிணைத்தற்குமாக 1944 ம் ஆண்டு ஒரு கொமிஷன் நியமிக்கப்பட்டதுடன் 1947 ம் ஆண்டில் ஒரு புதிய தொழில், சமூக சேவா மந்திரி காரியாலயமும் நிறுவப்பட்டது. அடுத்த வருடத்தில் தனிமையாக அமைக்கப்பட்ட சமூக சேவைப் பகுதி, முன்பு தொழிற் பகுதியால் நிர்வகிக்கப்பட்ட ஏழை நிவாரண வேலைகள், தொழிலாளர் நஷ்டஈடு சம்பந்தமான வேலைகள், தர்மஸ்தாபனங்கள் சம்பந்தமான கடமைகள், கஷ்ட நிவாரணம், சமூக விமாத்திட்டம் என்பவற்றைச் சார்ந்த முயற்சிகள் யாவற்றையும் கையேற்று நடாத்தத் தொடங்கியது. ஏழைகளுக்கு அரசாங்க உதவியளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட 1939 ம் ஆண்டின் 30 ம் இலக்க ஏழைகள் நிவாரணச் சட்டமே, சமூக சேவை சம்பந்தமான சட்டங்களுள் மிகவும் பிரதானமானதாகும்.

இச்சட்டத்தை சகல கிராமப் புறங்களிலும் நாட்டுப் புறங்களிலும் அமுல் நடத்த அதில் வசதிகள் இருக்கின்றனவெனினும், மாநகர சபை எல்லைகளுக்கு வெளியே அது அமுல் நடத்தப்படவில்லை.

மாநகர சபை எல்லைகளுக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் நிவாரண வேலைகளைச் செய்யும்பூரண பொறுப்பு மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் காரியாதிகாரிகள் மூலமும் பின்வரும் திட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன :

[காரியாதிகாரிகளுக்கு டிஸ்திறிக் ஆலோசனைக் கமிட்டிகளும், ஸ்தல கமிட்டிகளும் உதவியளிக்கின்றன.] அத்திட்டங்களாவன :—

(அ) பொதுசன உதவிப் பணம்.

(ஆ) வெள்ளத்தாலேற்பட்ட கஷ்டங்களுக்கான நிவாரணம்.

(இ) வேளாண்மைக் குறைச்சல், பெருவாரி நோய்கள், இதர அசம்பாவித காரணங்கள் என்பவற்றால் ஏற்படும் பாரந்த கஷ்டத்துக்கான நிவாரணம்.

நோயாளிகள், வயோதிபர், வலுவிழந்தோர், சரீர, மன வியாதியாளர், கைம்பெண்கள், கதியற்ற கைம்பெண்கள் ஆகியோருக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் மாதாந்த உதவிப் பணமாக உதவியளிக்கப்படுகிறது. தனிப்பட்ட ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 5 ம், வேறு ஆட்களைத் தாபரிக்கும் ஒருவருக்கு மாத மொன்றுக்கு ரூபா 10 ம் 1946 ம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டது. இம்முறை 1948 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை அமுலில் இருந்தது. ஆனால் அத்தொகை 1948 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் முறையே ரூபா 10 ம் ரூபா 20 ம் ஆக உயர்த்தப்பட்டன.

1947-1948 ம் ஆண்டில் 42,700 பேருக்கு நிவாரமளிப்பதற்கு மாதாந்த உதவிப்பணம் வழங்கிய கணக்கால் ரூபா 3,200,000 செலவிடப்பட்டது. அடுத்தவருடத்தில் 45,000 பேருக்கு நிவாரணமளிக்கச் செலவிடப்பட்ட தொகை ரூபா 5,800,000. 1949 ம் ஆண்டில் 60,000 பேரின் நிவாரணத்துக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 5,500,000.

விபத்துக்கள் அல்லது தெய்வாதீனமான காரணங்களால் தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறுகூட்டத்தவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு சமயோசித நிவாரணமளிப்பதற்காக 1948-49 ம் ஆண்டில் 142,000 ரூபாவும்—அடுத்த வருடத்தில் 117,000 ரூபாவும் செலவிடப்பட்டன.

## இஷ்டபூர்வமான ஸ்தாபனங்கள்

சமூக சேவையை மேற்கொண்டுநடாத்தும் இஷ்டபூர்வமான தர்ம ஸ்தாபனங்கள் அநேகமிருக்கின்றன. வயோதிபர் விடுதிகள், ஆபத்துக்குதவிச் சங்கங்கள், சமூக சேவைச் சங்கங்கள் முதலியன அவற்றிலடங்கும். இந்த ஸ்தாபனங்கள் மிக அவசியமும், உபயோகமுமான சேவையைச்செய்து வருகின்றனவெனினும், உதவி கோரும் ஆட்களின் தொகைக்குத் தக்கதாக, போதிய நிதி வசதிகளில்லாதிருத்தல் பொதுவாக அவற்றின் முயற்சிகளைக் குறைவடையச்செய்கிறது. எனவே, அச்சங்கங்கள் பொது மக்களின் ஆதரவைப் பெறுமளவுக்குத் தக்கதாக, அரசாங்க நன்கொடைகள் அவற்றுக்கு வழங்கப்படுகின்றன.

1949-1950 ம் ஆண்டில் இத்தகைய நாற்பத்தேழு ஸ்தாபனங்களுக்கும் நிலையங்களுக்கும் ரூபா 135,800 நன்கொடையாக வழங்கப்பட்டது. ஆனல் முந்திய வருடத்தில் முப்பத்தெட்டு ஸ்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 106,540 ஆகும். பொது மக்களின் பணத்தைக் கொண்டு அல்லது சில தருணங்களில் இஷ்ட பூர்வமான ஸ்தாபனங்களின் பணத்தைக் கொண்டு நிறுவப்பட்டுச் செயலாற்றிவரும் விடுதிகளுக்கு நன்கொடைகள்மூலமாக உதவியளிப்பதே, வயோதிபர் விடுதிகள் சம்பந்தப்பட்டமட்டில் இற்றைவரை அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்தது. ஆனல் இஷ்டபூர்வமான ஸ்தாபனங்கள், பெருமளவில் ஏற்படும் நிவாரணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளைச் சமாளிக்க முடியாதிருந்ததனால், வயோதிபர்களுக்கான அரசாங்க விடுதிகளை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஏற்கெனவே, தென்மாகாணத்தில் கொக்கலை எனுமிடத்தில் ஓர்விடுதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதர மாகாணங்களில் இத்தகைய விடுதிகளை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

செவிடர்களதும் குருடர்களதும் பிற்காலப் பராமரிப்புக்கு அரசாங்கமே பொறுப்பாகவிருக்க வேண்டுமென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. செவிடர்களும், குருடர்களும் தங்கி வேலைசெய்யும் தொழில் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு **1949–50** ம் ஆண்டு மதிப்பீட்டுச் செலவில் **402,400** ரூபா ஒதுக்கப்பட்டது.

**கஷ்ட நிவாரணம்**

வெள்ளம், புயல், பெருவாரிநோய்கள், வேளாண்மைக் குறைச்சல், நெருப்பால் வீடுகளுக்கும் பொருட்களுக்கும் சேதமேற்படல் போன்ற காரணங்களால் அசாதாரண கஷ்டங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் நிவாரணமளிக்கப்படுகிறது. தமது சீவியத்தை நடாத்துவதற்கு முற்றிலும் அல்லது ஓரளவுக்கு தினசரிச் சம்பள வேலைகளில் தங்கியிருப்பவர்களும், ஏற்பட்ட சேதத்தைத் திருத்தக்கூடியவர்களென எதிர்பார்க்க முடியாத கிராமவாசிகளும், குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களும் நன்கொடை பெறத் தகுதியுடையவர்களாவர். இந்த வகையில் **1948–1949** ம் ம் ஆண்டில் ரூபா **1,626,054** செலவிடப்பட்டதெனினும், **1949–1950** ம் ஆண்டில் ரூபா **923,541** மாத்திரமே விடப்பட்டது.

இலங்கையை ஒரு சமூகசேவைநாடு என அழைக்கலாம். இதற்குப் போதிய காரணங்களும் பலவுண்டு. இலங்கையில் சமூக சேவைக்காக அரசாங்கத்தால் செலவிடப்படும் தொகையின் சத விகிதம் வெளிநாடுகளிலுள்ள நிதி நிபுணர்கள் அநேகருக்கு அதிக மகிழ்ச்சியையூட்டியுள்ளது. இத்தொகைக்கும் தென்கிழக்காசியாவிலுள்ள இதர நாடுகளில் செலவிடப்படும் தொகைக்கும் பெரிய வித்தியாசங் காணப்படுகிறது. நாட்டின் மனித சக்தியே நாட்டின் பெருஞ் செல்வம் என்பதை அரசாங்கம் சரியாக உணர்ந்திருப்பதனால், அதன் மனித சக்தியை அபிவிருத்தி செய்யவேண்டியது அரசாங்கத்தின் பிரதான கடமையாக வேண்டும். இந்தக் கொள்கையை அனுஷ்டித்து தற்போதைய அரசாங்கமும். அதற்கு முன்பு டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழிருந்த அரசாங்கங்களும் சமூக சேவைகளுக்கென்று—பிரதானமாக மக்களின் தேகாரோக்கிய, கல்வி அபிவிருத்திக்காக—இயன்றளவில் பெருந்தொகையை ஒதுக்கிவைத்தன. **1925–26—1929–30** ம் வருடங்களுக்குட்பட்ட காலத்தில் அதாவது நிவாரணமளிக்கத் தொடங்கிய காலத்தில் ஏறக்குறைய அரசாங்கக் கணக்கில் **16·4** சதவிகிதமான தொகையே சமூக சேவைகளுக்காகச் செலவிடப்பட்டது. அதற்கடுத்த காலத்தில் **26·4** சதவிகிதம் செலவிடப்பட்டது. ஆனால் தற்போதைய அரசாங்கம் **1947–48** ம், **1948–49** ம் ஆண்டுகளில் முறையே **56·1** சதவிகித தொகையையும், **47·5** சதவிகித தொகையையும் செலவழித்துள்ளது. ஏறக்குறைய **50** சதவிகிதமான தொகை சமூக சேவைகளுக்காகச் செலவழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச் செலவுத் தொகையின் பெரும்பாகத்திலிருந்து உடனடியாக அதிக பலாபலனைப் பெற்றுக்கொள்ளமுடியாது. நீண்டகால தேசிய அபிவிருத்தித் திட்டத்தின்படி செலவிடப்படும் தொகைகள் இலாபமளிக்கும் போதுங்கூட இப் பலாபலன்களைப் பெறுவது அசாத்தியமாகும். ஆனால் வெளிநாடுகளின் போட்டியைத் திடமாக எதிர்க்கக்கூடியதாக, எமது வருங்கால சந்ததிக்கு கல்வி சம்பந்தமாகவும் தேகாரோக்கியம் சம்பந்தமாகவும் சகல தேவைகளும் அளிக்கப்படும்.

**கல்வி.**

**1925–26** ம் ஆண்டில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகையான **78** லட்சம் ரூபாவுக்குப் பதிலாக **1949–50** ம் ஆண்டில் சொந்த வருவாயிலிருந்து **10** கோடியே **60** லட்சம் ரூபா செலவிடப்பட்டது. ஒரு சில பாடசாலைகளைவிட, தற்போது அரிவரி தொடக்கம் சர்வகலாசாலைப்படிப்பு வரை இலவசமாகக் கல்வியூட்டப்படுகிறது. **1949** ம் ஆண்டில் **3135** அரசாங்க பாடசாலைகள் இருந்தன. அவ்வருடத்தில், **5** ஆங்கிலப் பாடசாலைகள், **37** சிங்களப் பாடசாலைகள், **13** தமிழ்ப் பாடசாலைகள் என்பன உட்பட மொத்தம் **55** பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவ்வருடத்தில் **3257** உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுமிருந்தன. இலவசத் திட்டத்தின் பிரகாரம், ஒரு பாடசாலையின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் முழுச் சம்பளத்தையும், நிச்சயப்படுத்தப்பட்ட விகிதங்களின்படி கணக்கிடப்படும் நிர்வாக, தளவாடச் செலவுகளையும் கொடுக்க அரசாங்கம் இணங்கியுள்ளது.

ஆரம்பக் கல்விக்கும், உயர்தர கல்விக்குமாக இத்தீவெங்கணும் புதிய பாடசாலைகளை ஸ்தாபிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சர்வகலாசாலையை கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாற்றும் வேலையின் முதல் கட்டமும் தொடங்கிவிட்டது.

கிராமப்புற மக்களுக்கு வயதுவந்தோர் கல்வியின் பயன்கள் கிடைக்கத்தக்கதாகச் செய்வதற்கு **1939** ம் ஆண்டு முதல் ஒரு திட்டமான முயற்சி எடுக்கப்பட்டது. அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், மத்திய, சிரேஷ்ட பாடசாலைகள் என்பவற்றுடன் இணைக்கப்பட்ட வயதுவந்தோர் கல்வி நிலையங்கள் தற்பொழுது செயலாற்றி வருகின்றன. இலங்கையின் வயதுவந்தோர் கல்வித் துறையில், கிராமாபிவிருத்திப்பகுதி, ஸ்தல ஆட்சிப்பகுதி, மஹில சமிதி என்பவற்றின் வேலைகளை ஒருங்கிணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு இலவசமாக மத்தியானச் சாப்பாடு கொடுப்பதற்கு அரசாங்கம் வசதியளித்துள்ளது. இதனால் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளுக்குப் போதியளவு உணவளிக்க வழியில்லாத வறிய பெற்றோர்களுக்கும் பெரும் விமோசன மேற்பட்டது. **1936** ம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகளின் இலவச மத்தியானச் சாப்பாட்டுக்காக ரூபா. **242,000** செலவழிக்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக அதிகரித்ததுடன் **1950–51** ம்ஆண்டில் அரசாங்கம் செலவிட்ட தொகை **10,000,000** ரூபாவாகும்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக்கிரட்டேறியட் பௌத்த சங்க அங்கத்தவர்களின் திருகோணமலை விஜயம்

இலங்கை சுதந்திரம் பெற்று சிலவாண்டுகளின் பின் முதன்முதலாக அரசாங்கச் சேவையாளர் சிவராத்திரி தினத்தை விடுமுறையாகப் பெற்றனர். மகா சிவ ராத்திரியன்று, பல நூற்றாண்டுகளுக்கு முன்னே போர்த்துகீசரால் தரைமட்டமாக்கப்பட்ட திருகோணமலையிலுள்ள, கோணேசர் ஆலயத் திருப்பணிவிழா நடைபெறவிருந்தது. விடுமுறையை ஒரு நற் கைங்கரியத்திலே கழிக்க நினைத்த பௌத்த சங்கத்தவர் இவ்விழாவில் பங்குபற்ற திருகோணமலைக்குச் சென்றனர்.

கடந்த மாதம் 12 ந் திகதி காலை திருகோணமலையை அடைந்த சுமார் 200 பேர்களடங்கிய கோஷ்டி, திருகோணமலையின் சரித்திரப் பிரசித்திபெற்ற பலவிடங்களைப் பார்வையிட்டது. இக்கோஷ்டி கின்னியா வெந்நீரூற்றுக் கிணறுகளில் நீராடிவிட்டு கோணேசர் ஆலயத்தை அடைந்தது. அன்று கோணேசர் ஆலயம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுக் காட்சியளித்தது. திருகோணமலை பல நூற்றாண்டுகாலம் தமிழர்களின் ஆதிக்கத்திலிருந்துவந்தது. இக்காலத்திலேயே பழைய கோணேசர் ஆலயம் கட்டப்பட்டிருக்கலாம். இக்கோயிலை கி. பி. 1627 ம் ஆண்டில் இலங்கையில் தேசாதிபதியாகவிருந்த கொன்ஸ்தாந்தினு தெசா என்பவன் இடித்துத் தள்ளினான். இக் கோயிலை இடிக்குமுன், இக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபமும் அழகிய வீதியும் அமையப்பெற்ற ஆலயத்தின் படமொன்றை போர்த்துக்கீசர் லிஸ்பனுக்கு எடுத்துச் சென்றனர்.

கோயில் இடிக்கப்பட்டதும் அங்கிருந்த விக்கிரகங்களைப் பூசகர்கள் எடுத்துச் சென்று ஒளித்துவைத்தனர். கோயில் இடிக்கப்பெற்றபோதிலும் சைவர்கள் இங்கு அடிக்கடி விஜயஞ்செய்து பூசைசெய்து வந்தனர். டாக்டர் பாலேந்திரா இங்கு மீண்டும் கோயிலை நிறுவுவதற்கான முயற்சிகள் செய்துவந்தார்.



திருக்கோணேஸ்வரம்—புதிய தோற்றம்.



திருக்கோணேஸ்வரத்தில் அமைக்கப்பெற்ற பெரிய குத்துவிளக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ஷ்டவசமாக இவ்வரிய சந்தர்ப்பத்தில் மறைந்திருந்த விக்கிரகங்களும் வெளிப்பட்டன. பின்னர் தருமசிந்தையுள்ள ஒரு பக்தர் சிறு மண்டபமொன்றைக் கட்டுவித்தார். கடந்த வருடம் தோண்டியெடுக்கப்பட்ட கோணேசர் விக்கிரகங்கள் புதிதாக எழுப்பப்பட்ட இச்சிறு மண்டபத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. சிவராத்திரி உற்சவத்தை அஞ்சல் செய்ய இலங்கை வானொலி நிலையத்தார் இங்கு வந்திருந்தனர்.

இவ்விடத்தைத் தரிசித்தபின் மோட்டார் வள்ளத்தின் மூலமாக மூதூரை அடைந்தனர். அங்கு ரொபட் நொக்ஸ் என்ற ஆங்கில கப்பற் தலைவனைப் பிடித்த இடத்தை ஞாபகமூட்டும் புளியமரத்தைப் பார்வையிட்டனர். அங்கிருந்து இக் கோஷ்டி சேருவிலை என்னும் இடத்தில் காவந்திசன் என்னும் சிங்கள அரசனால் கட்டப்பட்ட புராதன தாகபையைத் தரிசித்தது.

புத்தர் இலங்கையை மூன்று முறை தரிசித்ததாக பௌத்தர்கள் கருதுகின்றனர். மூன்றாவதுமுறை இலங்கையின் மிகவும் முக்கிய இடங்களையெல்லாம் தரிசித்திருக்கின்றார். பௌத்தர்கள் புத்தர் இலங்கையிலேயே புத்தமதம் சிறியாகப் பரவுமென்பதை அறிந்திருந்ததால் தனது புனித தாதுக்களை இலங்கையிலேயே அடக்கஞ் செய்யுமாறு தனது சீடர்களிடம் கேட்டுக்கொண்டாராம். இதனாலேயே இங்கு புத்த புனித தாதுக்கள் பல காணப்படுகின்றன என பௌத்தர்கள் வாதிக்கின்றனர். சேருவிலை மிகவும் புராதன தாகபையாகும். இதனை காவந்திச மன்னன் கட்டியதாகத் தெரியவருகின்றது. இத் தாகபையில் புத்தரின் நெற்றி எலும்பு அடக்கஞ் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இத்தாகபை மூதூரிலிருந்து 12 மைல் தூரத்தில் காட்டினிடையே இருக்கின்றது. பௌத்தர்கள் அடிக்கடி இங்கு விஜயஞ் செய்கின்றனர். இவ்விடத்தை அடைந்த கோஷ்டியினர் தாகபையின் வளவிலே வண. நாரத பௌத்த குருவின் தர்மோபதேசத்திற்குச் செவிசாய்த்து, அன்றிரவு அங்கு தங்கி மறுநாள் கொழும்பு திரும்பினர்.



65 வருடம் சேவையாற்றிய கோவில்வயல் பாடசாலையின் புதிய கட்டடத்தை சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. V. குமாரசாமி அவர்கள் திறந்து வைத்த வைபவத்தின் பின் எடுக்கப்பட்ட படம்.

## கோவில்வயல் த. க. பாடசாலை, புதுக்கட்டடத் திறப்பு விழாவும் 65 வது ஆண்டு நிறைவு விழாவும்

கடந்த 19.2.53 வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு உணவு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியும் சாவகச்சேரிப் பிரதிநிதியுமாகிய திரு. வி. குமாரசாமி அவர்கள் கோவில் வயல் சி. சி. த. க. பாடசாலைப் புதுக் கட்டடத்தை குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். பின்னர் வித்தியாதரிசி திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் தலைமையில் இப்பாடசாலையின் 65 வது ஆண்டு நிறைவு விழா ஆடம்பரமாக நடைபெற்றது. சுமார் 350 பேர் சமூகமளித்தனர். தலைமையாசிரியர் திரு. க. இராஜேந்திரம் தமது அறிக்கையில் கடந்த 65 வருட நிகழ்ச்சிகளை சுருங்கக் கூறினார். சுமார் 1,000 ரூபா செலவில் கட்டப்பட்ட பாலரின் புதுக் கட்டடத் திருப்பணியையும் பெருமனதுடன் நூற்றுக்கணக்காக தருமம் கொடுத்த திரு. கே. பொன்னம்பலம் போன்ற பெரியோரின் சேவையையும் குறிப்பிட்டார்.

சுமார் 62 வருடங்களாக பிற்போக்கு நிலையிலிருந்த பெண்பிள்ளைகளுக்கு தையல் கலையைச் சிறந்த முறையில் குறைந்த ஊதியத்துடன் நிறைந்த மனதுடன் செய்து வரும் ஸ்ரீமதி ஆர். சவிரிமுத்து அவர்களின் சேவையை பெரிதும் வியந்தனர்.

பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாசம், முகாமைக்காரர் வண. ஏ. பி. கனகரத்தினம், டி. ஆர். ஓ. திரு. சுப்பிரமணியம், சோறம்பற்று தலைமையாசிரியர் திரு. ஜே. எஸ். சின்னையா, கிராமச் சங்கத் தலைவர் திரு. எஸ். குமாரசாமி, வித்தியாதரிசி திரு. எஸ். இராமலிங்கம், பகுதிப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி ஆகிய பலர் கல்வி முறை, உணவு உற்பத்தி, மிஷனறிகளின் சேவை இவைபற்றிப் பேசினர். நடனம், பாட்டு, யோகாப்பியாசம், போன்ற பிள்ளைகளின் கதம்ப நிகழ்ச்சியும் வாலிப கோஷ்டியினரின் சீனடி சிலம்படி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திரு. வி. குமாரசாமி பரிசளித்தார்.

—க. ரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது !

S. 196-X54 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிவகை

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

வரண்ட பூமியில் மழை வீழ்ந்தால் எப்படி நீர்முழுதும் சுவறிவிடுகிறதோ, அப்படியே, பல்லாயிரம் ஏழைமக்கள் கையில் பகிர்ந்தளிக்கப்பட்ட தேசிய செல்வமும் அவர்களிடையே சுவறிவிட்டது. திரும்ப அச்செல்வம் தேசாபிவிருத்திக்கு மூலதனமாக வரமாட்டாது. எவ்வளவு தீங்குள்ளதாயிருந்த போதிலும் முதலாளி வர்க்கத்தினர் கையில் பணம் குவிந்திருந்தபொழுது ஏராளமான தொகை அரசாங்க சேமிப்புச் சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டதனால் அரசாங்கத்துக்கு மூலதனம் பெருகிக்கொண்டேயிருந்தது. தனவந்தர்கள் எவ்வாறு இடாம்பீகமாக வாழ்ந்து பணத்தைச் செலவு செய்த போதிலும் அவர்கள் அரசாங்கத்திடம் கடன் கொடுத்த தொகையோ கோடிக் கணக்கில் இருந்தது. தேசிய செல்வம் இப்பொழுது பகிர்ந்து பல்லாயிரம் மக்கட்குக் கொடுக்கப்பட்டதனால் முதலாளி வர்க்கத்தினரிடம் செல்வம் தளர்ந்தது. கோடிக் கணக்கான ஏழை மக்களிடம் சிறு சிறு தொகையாய் பிரிந்து [illegible] தேசிய [illegible] புது முதலீட்டில் [illegible]க்கொள்வதென்றால் இயலாத காரியம். பகிர்ந்து கொடுக்கும் முறையினால் ஏற்படுவதிதுவே. இதனால் தேசிய செல்வம், பகிர்ந்து கொடுக்கும் முறை பிழையானதென்றும் வறியவர்கள் வறியவர்களாகவே இருக்க வேண்டு மென்றும் பரம்பரை பரம்பரையாக வந்த முதலாளி வர்க்கத்தினரிடையேதான் செல்வம் நிலைத்திருக்க வேண்டுமென்றும் நாம் விரும்புவதில்லை. ஆனால் தேசாபிவிருத்திக்கு முதலைத் திரட்டிக் கொள்வதற்கு ஒரு புதிய உத்தியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே இது தெரிவிக்கின்றது. இப்பொழுது தேசிய முதலைத் திரட்டும் வகையில் ஏழை மக்களும் உதவி செய்யவேண்டும். தேசிய நிர்மாண வேலையில் ஏழை மக்கட்கும் பெரிய பங்குண்டென்பதை மகாஜனங்கள் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால் இப்போது நாட்டின் செல்வம் குடியானவர்கள் தொழிலாளர் போன்ற மக்களிடம் பகிர்ந்து கிடக்கின்றது. நாட்டிலுள்ள ஏழையும் குடியானவனும் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற இலேசான சேமிப்புச் சாதனங்களாகிய தேசிய சேமிப்புகளில் முதலீடு செய்யலாம். தேசிய சேமிப்பு இயக்கம் மூலம் சேர்க்கும் தொகை லட்சக் கணக்கில் இருக்கின்றதே யென்று யாரும் பயந்து விடக் கூடாது. நாம் லட்சக் கணக்கானவர்கள் இருக்கிறோம். ஆளுக்குச் சொற்பம் சேமித்தாலும் பெரிய தொகை சேர்ந்துவிடும். அதற்கு உதவியாக அரசாங்கமும் இலேசான ஓர் சேமிப்புச் சாதனத்தை ஏற்படுத்து இருக்கின்றது. அதுவே சேமிப்புத் பத்திரமாகும். இதிற் போடும் பணம் நமது அரசாங்கத்தின் கையில் பத்திரமாய் இருக்கும். அதற்கு நல்ல வட்டியும் கிடைக்கும். நூறு ரூபாயை இந்தப் பத்திரத்தில் முதலீடு செய்தால் பன்னிரண்டு வருடங்கட்குப் பின்பு நூற்றைம்பது ரூபா ஆகின்றது. இந்தப் பத்திரத்தை இழந்த போதிலும் பணம் பத்திரமாக இருக்கும். ஒவ்வொருவரும் தாம் வாங்கும் சேமிப்புப் பத்திரங்களை வீர விருது போல் மதிக்க வேண்டும். முழுவட்டி உழைக்கும் வரைக்கும் அவற்றை மாற்றாது வைத்திருந்தால் அரசாங்கத்துக்கு உதவியாவதுடன் சேமிப்பவர்கட்கும் நல்ல தேட்டம் உண்டாகும்.

இலட்சக் கணக்கான ஏழைமக்கள் சொற்பம் சொற்பமாக சேமித்துத் திரட்டும் பணம் முன்னாளில் பணம் மிகுத்த முதலாளி வர்க்கத்தினர் கொடுக்கும் தொகையிலும் கூடியதாய் வருமல்லவா?

ஏழை உழவர்களே! தொழிலாளிகளே! எழுமின்! விழிமின்! முன்னிருந்த தனவந்தர்கள் இப்பொழுது இல்லை. எனவே, நாடு உங்களுடையது. நாட்டை விருத்தி செய்வது உங்கள் பொறுப்பு. நல்ல வழிகளில் பணம் ஓடுமாயின் நற்பயனையே ஈற்றில் கொண்டுவரும். எனவே தேசாபிவிருத்திக்காக தேசிய சேமிப்புகளில் நீங்கள் போடும் பணம் சொற்பமென்றாலும் ஈற்றில் உங்கட்கும் உங்கட்குப் பின்வரும் சந்ததியாருக்கும் ஐஸ்வரியத்தையும் கௌரவத்தையும் கொண்டுவரும். இராவணன் கடவுளை ஒரு வரங் கேட்டான். தேவர்களையும் அசுரர்களையும் வென்று தனிநாயகமாக, தான் நிற்க வேண்டுமென்று வரம் பெற்றான். கடவுள் மனித ரூபமெடுத்து வந்து மனிதனுடைய கஷ்டங்களை அனுபவித்து வனவாசமிருந்து வாழ்க்கையில் சோதனைகளையெல்லாம் கண்டு ஈற்றில் இராவணனையே சங்காரம் செய்தார். என்னவாயினும் கடைசியில் மனிதனுக்கல்லவா வெற்றி. விஜய தசமியின் வரலாறு இதுவே. இந்தப் புதினமான தினத்தில் அசுரர்களாலும் அளந்திடமுடியாத மனித சக்தியைக் கொண்டு ஒரு திடசங்கல்பம் செய்து கொள்வோம். நம்நாட்டை நாமே விருத்திசெய்ய பொருளுதவிசெய்வோம். உதவும் பொருள் அனைத்தையும் தேசிய சேமிப்புகளில் முதலிடுவோம். அதுவே எங்கள் சத்தியமாகும்.

---

## திருநெல்வேலியில் ஓர் பெண்கள் கமத்தொழிற் பாடசாலை

குண்டசாலையிலுள்ள பெண்கள் கமத்தொழிற் பாடசாலையைப்போன்ற ஓர் பெண்கள் கமத்தொழிற் பாடசாலையை யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியில் உணவு மந்திரி சேர். ஒலிவர் குணதிலகா அவர்கள் பெப்ரவரி மாதத்தில் தொடக்கி வைத்தார். அவ்வமயம் உணவு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. குமாரசுவாமி அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் மாபெருந் திரளான மக்களும் குழுமியிருந்தனர்.

இலங்கை விவசாயத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால், இந்நாட்டு ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டுமென்று காலஞ்சென்ற பிரதமர் டீ. எஸ். சேனநாயகா அவர்கள் கொண்ட கருத்து நிறைவேறு மென்பதை இத்தகைய பாடசாலைகள் தெளிவுபடுத்துகின்றன. இங்கு பயிலும் மாணவிகளுக்கு நவீன விவசாய முறைகளிலும் இயந்திரக் கலப்பை உபயோகங்களிலும் பயிற்சியளிக்கப்படும். சீதோஷ்ண நிலைமைகள் வாய்ப்பாக இல்லாத போதும், கடின உழைப்பினால் கமத்தொழிலை ஆர்வத்துடன் செய்யும் யாழ்ப்பாண வாசிகளுக்கு, இப்பாடசாலையில் மாணவர்கள் பெறப்போகும் பயிற்சி பெரிதும் நன்மை பயப்பதாயிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

கல்வியை முடித்துக்கொண்டு அரசினர் காரியாலயங்களை நாடிச் செல்ல ஏவிய சந்தர்ப்பங்களும் இனிமேல் ஓரளவுக்குக் குறையக்கூடும்.

**" உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர் ".**

Appropriate Technology Services 121, P... N... LUR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லக்ஸ்
டாய்லட்
சோப்
உபயோகிப்பது தான்
எனது அழகு
பராமரிப்பு"

என்று கூறுகிறார்
ரெஹானா




இனிய மணத்துடன்கூடிய இந்த வெண்மை
யானதும், சுத்தமானதுமான சோப் உங்கள்
சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 360-X52 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | | விலை ரூ. ச. | தபாற் கூலி ச. |
|---|---|---|---|
| 1 | இலங்கையில் போக்குவரத்து நிலைமை (முதலாம் பாகம்) | 2·50 | 30 |
| 2 | இலங்கையில் போக்குவரத்து நிலைமை (இரண்டாம் பாகம்) | 2·50 | 30 |
| 3 | மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும் .. | 0·10 | 20 |
| 4 | நம் நாட்டின் பாடசாலைகள் .. .. | 1·00 | 25 |
| 5 | வரவு செலவுத் திட்டப் பிரசங்கம் 1950—51 .. | 0·10 | 20 |
| 6 | வரவு செலவுத் திட்டப் பிரசங்கம் 1951—52 .. | 0·25 | 20 |
| 7 | இலங்கையின் சுதந்திரம் நிர்வாக கால பத்திரம் XXII—1947 .. | 0·45 | 10 |
| 8 | புதிய போதனுமுறைகள் .. .. | 2·50 | 30 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு, 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சமாச்சாரப் பகுதியினருக்காக, அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org